இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2021. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 145 | இதழ் : 08 | திகதி : 23.05.2021 | விலை : 30.00

# இனப்படுகொலைக்கு நீதி கேட்கும் மக்களோடு வடக்கு – கிழக்கு ஆயர்களும் இணைந்து அஞ்சலி



முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை நினைவு கூர்ந்தனர்

"இழைக்கப்பட்ட குற்றங்களுக்கு நீதி கேட்டுப் போராடும் மக்களோடு இணைந்து வடக்கு-கிழக்கு ஆயர்களாகிய நாம் மே 18ஆம் திகதியை இனப்படுகொலையை நினைவுகூரும் நாளாகவும் செப நாளாகவும் அனுசரிக்கும்படியாக வடக்கு-கிழக்கு வாழ் தமிழ் மக்கள் அனைவரையும் வினயமாகக் கேட்டுக்கொள்கிறோம்." இவ்வாறு வடக்கு-கிழக்கு ஆயர் மன்றம் அழைப்பு விடுத்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

**இது குறித்து வடக்கு - கிழக்கின் 4 ஆயர்களும் விடுத்த அழைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:** மே மாதம் 18 வஆம் திகதி இலங்கையின் வடக்குக் கிழக்கு வாழ் மக்களுக்கு முள்ளிவாய்க்கால் இனப் படுகொலையின் பன்னிரண்டாவது ஆண்டு நிறைவாகும். இறுதி யுத்தத்தின்போது பலியானவர்களுக்கு இறுதிக்கிரிகைகள்கூட செய்யமுடியாது புதைத்து விட்டுத் தப்பிப் பிழைத்து வந்தவர்களும், அதற்குச் சாட்சிகளாக இருக்கும் ஏனையவர்களும் பலியானவர்களைக் கண்ணீரோடு நினைவுகூரும் நாளாகும். இறந்தவர்களை நினைவுகூரும் உரிமையுடைய நாளாகவும் அந்நாள் இருக்கின்றது. படுகொலை செய்யப்பட்டவர்கள் அனுபவித்த வேதனைகளும் துன்பங்களும் விடுதலை வாழ்வுக்கு தொடர்ந்து பங்களிப்புச் செய்கின்றன. ☞ 02

# உலகப்போரை முடித்துவைத்த மரியன்னை கொரோனாப் போரையும் முடித்து வைப்பார்

## நம்பிக்கையோடு செபிக்குமாறு யாழ். ஆயர் அழைப்பு



கொடூரமான இரண்டாம் உலகப்போர் முடிவுக்குவரவேண்டுமென அன்னை மரியாவை நோக்கித் திருச்செபமாலை செபித்து மன்றாடிய எமது முன்னோரின் மன்றாட்டைக் கேட்டு உலகிற்கு அமைதியை அளித்தார் மரியன்னை. அதே அன்னை மரியாவிடம் நாமும் இன்று உலகை உலுப்பிவரும் கொரோனா என்னும் கொடிய வைரசின் போர் முடிவுக்கு வரவேண்டுமென நம்பிக்கையோடு மன்றாடி எமக்கும் எமது எதிர்கால சந்ததியினருக்கும் ஆரோக்கியமான அமைதியான வாழ்வைப் பெற்றுக் கொடுப்போம் என யாழ் மறைமாவட்ட ஆயர். பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை பண்டத்தரிப்பு புனித பத்திமா அன்னை ஆலய திருநாள் திருப்பலியின் போது தனது மறையுரையில் குறிப்பிட்டார்.

தனது பிள்ளைகள் துன்பத்தில் இருக்கிறபோது அதை அறிந்து தாமாகவே வந்து துணைசெய்யும் மரியன்னை நாம் வேண்டிக் கேட்கிறபோது எமது வேண்டுதல்களை ஒருபோதும் புறக்கணிக்கமாட்டார். ஆகவே, எத்தகைய நம்பிக்கையற்ற நிலைகள் தோன்றினாலும் அன்னையின் வல்லமையுள்ள பரிந்துரையில் நாம் நம்பிக்கை வைத்தால் ஒருபோதும் ஏமாறமாட்டோம் என்று மேலும் தெரிவித்த ஆயர் அவர்கள் இன்றைய உலகில் நம்பிக்கையிழந்து தடுமாறுவோருக்காகச் சிறப்பாக செபிக்குமாறும் கேட்டுக்கொண்டார். ☞ 02

# யாழ். ஆயர் தலைமையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்



முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர் இல்லத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு இடம்பெற்றது.மரியன்னை பேராலய மணி ஒலிக்கவிடப்பட்டு, தீபங்கள் ஏற்றி இந்த நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் தலைமையில் மறைமாவட்டக் குருமுதல்வர், அருட்தந்தையர்கள் பங்கேற்புடன் இந்த நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் முள்ளிவாய்க்கால் கஞ்சியும் பரிமாறப்பட்டது.

# மே –18 இனப்படுகொலை நினைவு அடுத்த தலைமுறைக்குக் கடத்துவோம்

## தமிழ் சிவில் சமூக அமையம் அழைப்பு

12 மே 2021 அன்று முள்ளிவாய்க்காலில் கடந்த பல வருடங்களாக நிறுவப்பட்டிருந்த நினைவுச்சுடர் தாங்கியை இலங்கை அரசாங்கம் சேதமாக்கியுள்ளது. எந்த அரச வக்கிரம் இனப்படுகொலையை எம்மீது கட்டவிழ்த்து விட்டதோ அதே அரச வக்கிரம் எமது உறவுகளை நினைவு கூருவதைத் தடை செய்கின்றது. இந்தத் தேசத்தில் கண்ணீர் விடுவதும் விளக்குக் கொளுத்துவதும் குற்றமாக்கப்பட்டுப் பல வருடங்கள் ஆகின்றன. இதுவும் இனப்படுகொலையின் தொடர்ச்சியே.

போருக்குப் பிந்திய எமது தேசத்தில் கண்ணீரும் நினைவுமே எமது மிகப் பெரிய அரசியல் ஆயுதங்கள். எமது சுயநிர்ணய உணர்வையும் சுதந்திர தாகத்தையும் அணைய விடாமல் பாதுகாக்க நினைவு முக்கியம். எமது வடுக்களை, துயரை நாம் சந்ததிகளோடு கடத்துவது எமது கூட்டுணர்வுக்கும் இருப்பிற்கும் முக்கியமானது. நினைவுத்தூபிகளை அழிப்பதென்பது நினைவு கூரலை அழிப்பதாகாது என்பதை எதிர்வரும் மே 18 அன்று ஒன்றிணைந்து வெளிப்படுத்துவோம். ☞ 02

# இந்தியாவில் 117 குருக்கள் கொரோனாவுக்குப் பலி

இந்தியத் திரு அவையில் பணியாற்றும் மறைமாவட்டத் துறவற சபைகளைச் சேர்ந்த 117 குருக்கள் கொரோனாப் பெருந்தொற்றுக்குள்ளாகி மரணித்துள்ளனர். மேலும் பலர் தொற்றுக்குள்ளாகி மருத்துவமனைகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர். இறந்தோர் இறைவனில் இளைப்பாறவும் நோயுற்றோர்கள் நலம் பெறவும் எம் செபங்களில் இவர்களைத் தாங்குவோம்.

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)

# எமது எண்ணம்

## நினைவேந்தலும் ஆயர்களும்

ஈழத் தமிழர்களின் எழுபது ஆண்டுகால அரசியல் விடுதலைப் போராட்டம் இன்று சர்வதேச அரங்கில் தீவிரமாகப் பேசப்பட்டு வருகின்றன. இதனாலேயே முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நடைபெறும் காலங்களில் இலங்கை அரசாங்கம் அந்த நினைவேந்தல் நிகழ்வுகளைத் தடுக்க முற்படு கின்றது எனக்கூறினாலும், எதிர்காலத் தமிழ்ச் சமூகம் அதனை மறந்து, இலங்கை ஒற்றையாட்சி அரசியல் யாப்புக்குள் இணங்கி வாழ வேண்டுமென்பதும் பிரதான நோக்கமாகும்.

இவ்வாறானதொரு நிலையிலேயே வடக்குக் கிழக்குத் தமிழ் ஆயர்கள் கூட்டாக அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கின்றனர். அதாவது முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வணக்க வழிபாடுகளில் ஈடுபட வேண்டுமென்ற முக்கியத்து வத்தை நான்கு ஆயர்களும் வலியுறுத்தியிருக்கின்றனர். பேரருட்திரு கி.நோயல் இம்மானுவெல் (திருகோணமலை மறைமாவட்ட ஆயர்), பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் (யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர்), பேரருட்திரு இம்மானுவேல் பெர்னாண்டோ (மன்னார் மறைமாவட்ட ஆயர்), பேரருட்திரு யோசப் பொன்னையா (மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர்) ஆகிய நான்கு ஆயர் பெருந்தகைகளும் தமது கையொப்பத்துடன் அந்த அறிக்கை வெளி யிட்டிருக்கின்றமை பாதிக்கப்பட்ட ஈழத் தமிழினத்துக்குப் பெரும் ஆறுதலா கவும் அமைந்திருந்தது.

முள்ளிவாய்க்கால் நினைவுகளைப் பகிரங்கக் கூட்டு நினைவெழுச்சியாக இல்லாது மாற்றிவிடவேண்டும் என்று இலங்கை ஒற்றையாட்சி அரசு கங்கணம் கட்டி நிற்கிறது. நினைவேந்தலை நீர்த்துப்போகச்செய்யும் இந்தச் செயற்பாட்டில் உலக, பிராந்திய வல்லாதிக்கங்களும் இணைந்துள்ளன. பல தரப்புகளால் பல அடுக்குகளில் நகர்த்தப்படும் இந்த நகர்வுகளை ஈழத்தமிழர்கள் உணர்வுரீதியான முனைப்புகளூடாக மட்டும் முறியடித்துவிடமுடியாது. தார்மீக அடிப்படையில் நினைவுத்திறத்தை (Memorialisation) முன்னெடுக்கவேண்டும். இதைச் செய்வதில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு முக்கியமான பொறுப்பு இருக்கிறது. இந்தப் பொறுப்பை நினைவேந்தல் நாட்களில் இவர்கள் சரிவரச் செய்திருக்கிறார்களா என்பதை உணர்வுத் தளத்துக்கு அப்பால் அறிவுரீதியாக ஆராயவேண்டியிருக்கிறது.

ஈழத் தமிழர்களின் அரசியல் விடுதலைக்காகப் போராடி உயிர்த் தியாகம் செய்தவர்களை நினைவுகூருவதற்கு இலங்கை ஒற்றை ஆட்சி அரசும் அதன் முப்படைகளும் காவற்துறையும் தீவில் நிலவும் அரசியற் சூழலுக்கேற்ப ஒவ்வொரு ஆண்டும் விதம் விதமாகத் தடங்கல்களை ஏற்படுத்துவது வழமை. இந்த ஆண்டு, குறிப்பாக இலங்கை பொதுஜனப் பெரமுன அரசாங்கம் பதவி வகிக்கும் தருணத்தில், இந்த நிலைமை மேலும் வீரியமுற்றுள்ளது.

ஈழத்தமிழர்கள் தமது உறவுகளுக்காகக் கூட்டு நினைவேந்தலைப் பகிரங்க நிகழ்வுகளாக முன்னெடுக்கக்கூடாது என்பது இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாடாக அவர்களின் முன்னைய ஆட்சியிலும் காணப்பட்ட ஒன்றே. எனி னும் இவ்வருடம் சில வித்தியாசங்கள் தென்படுகின்றன. தற்போது கொவிட்-19 நோய்ப்பரவலைக் கட்டுப்படுத்த உருவாக்கப்பட்டுள்ள சில புதிய விதிகளையும் அரசாங்கம் பயன்படுத்துகிறது.

இதை எந்த வகையில் ஈழத்தமிழர் தரப்பு எதிர்கொண்டிருக்க வேண்டும் என்பதே இங்கு எழுகின்ற கூர்மையான கேள்வி. நடைமுறையில் நடந்தேறியவற்றைப் பார்க்கும் போது தமிழ்த்தேசியக் கட்சிகள் அனைத்தும் அரசின் ஒழுங்குப்படுத்தலுக்கு பலியாகியிருப்பது புலனாகிறது.

கட்சி அடையாளங்களுக்கு அப்பாற்பட்டு, மக்களாணை பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களாக, ஒருமித்த கூட்டாக, ஓரிடத்தில் நின்று, கூட்டு நினைவேந்தலை சிறிதாகவேனும் இவர்கள் நடாத்தியிருந்தால் 'தனி யார்' நினைவேந்தலை மட்டும் அனுமதிப்பது என்ற இலங்கை ஒற்றையாட்சி அரசின் சட்டத்தைப் பயன்படுத்தும் 'ஒழுக்கப்படுத்தலுக்கு' உள்ளாகாத தன்மையை, தமக்குரிய பாராளுமன்றச் சிறப்புரிமையையும் பயன்படுத்தி, வெளிப்படுத்தியிருக்கலாம்.

நோய்த்தடுப்புக் கருதி பங்குபற்றுவோரின் தொகை, இடைவெளி, மற்றும் சிறப்பு ஒழுங்குகள் பற்றிய கட்டுப்பாடுகளைப் பகிரங்க நிகழ்வுகளுக்கு விதிப்பது கூட ஏற்றுக்கொள்ளப்படக்கூடியது. ஆனால், முற்றுமுழுதாக கூட்டு நினைவேந்தலைத் தனது 'தேசிய பாதுகாப்பு' என்ற காரணத்தையும் சமவாயச் சட்டத்தையும் காட்டி ஒரு தேசத்துக்கு அல்லது மக்கள் கூட்டத்துக்கு மறுப்பதென்பது முற்றிலும் தவறானது.

இதற்குத் தக்க அரசியற் போராட்டப் பதிலடியைக் கொடுக்கத் தமிழ்த் தேசியக் கட்சிகள் என்று தம்மைச் சொல்லிக்கொள்ளும் அனைத்துக் கட்சிகளும் இம்முறை தவறியுள்ளன.

வெறுமனே யுத்தத்தில் இறந்து போனவர்களை நினைவு கூரும் நிகழ்வாக, அதுவும் தனியார் வெளியில் மட்டுமே நினைவேந்தல் செய்யப்பட முடியும் என்று இலங்கை அரசு முன்வைக்கும் கட்டளையைத் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களே ஏற்றுகொள்கிறார்களா என்ற கேள்வி இங்கு எழுகிறது.

எவ்வாறாயினும் வடக்குக் கிழக்கு தமிழ் ஆயர்கள் நால்வரும் கூட்டாக வெளியிட்ட இவ்வறிக்கையானது எமக்குப் பல செய்திகளைச் சுட்டிக்காட்டுகின்றது.

# யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியில் உயர்தர பரீட்சையில் 70 வீதமானவர்கள் சித்தி

யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியில் இருந்து க.பொ.த. உயர்தரம் 2020 ஆம் ஆண்டு பரீட்சையில் தோற்றிய மாணவர்களில் எழுபது சதவீதமான மாணவர்கள் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர். பிரிவு வாயிலாகச் சிறப்புப் பெறுபேறுகள் பெறும் மாணவர்கள் விபரம் வருமாறு.

**கணிதப் பிரிவு :-** A.P.பற்றிக் நிலக்ஷன் 3A (ஆங்கில மொழிமூலம்) A. றுக்ஷன் 3 A, T.சஜீவன் 2AB (ஆங்கில மொழிமூலம்), F.R.யூட் டினோஷன் 2 AB, N. சாம்சன் A 2 B, R.K.R. டனோசிகன் ACS, V.S.விவியன் B 2C.

**கலைப்பிரிவு :-** A.வினோஜன் 3A, F.எட்வின்ராஜ் 2AB, A.M.சஞ்சுவான் 2A B, C.குகேந்திரன் 2AC, M.மரியநிக்ஷன் A 2B, S. டிலக்ஷன் 2BC

**வர்த்தகப்பிரிவு :-** J.P.விதுஷன் 2AC, R.கொலின் கிளைப் ABC, J.ஆகாஷ் ABC, A.K.ஆர்னோல்ட் வில்ரன் 3B, S.சுகாந் 2BC.

**உயிரியற் பிரிவு :-** S.துலக்ஷன் 2BC, D.கீர்த்திகன் B2C, C.மரியநிதர்ஜன் B2C, E.J.தினேஸ்காந் B2C, P.அபிஷேக் B2C, J.B.அஜய் ஸ்ரெபான் B2C, V.தோகீஷன் B2C.

**தொழில்நுட்பப் பிரிவு** (பொறியியல்) :- A.F.அன்ரன் அஜித்குமார் A2B, A.R.அமலதாஸ் 2BS, J.ஜோசவ் B2C, R.சாதுஜன் A2B.

**தொழிநுட்ப பிரிவு** (உயிர்முறை தொழிநுட்பம்) :- C.ஜோயல் ABC, P.L.ஜோண் கிறிஸ்தோப்பர் A 2B, R. ஆரோன் 2BC, J.J.சிந்துஜன் 2CS, J.பிரகாஸ் 2CS

# கொரோனாவிற்கு சகோதரன் இளங்கோ மரணம்



யாழ் பேராலயம், புனித சென் ஜேம்ஸ் ஆலயம் ஆகிய வற்றில் திருநாள் நவநாட்களில் இந்தியாவிலிருந்து வருகை தந்து தமது பாடல்கள், இறைவார்த்தை வழிபாடு மூலம் இறை மக்களுக்கு இறை விசுவாசத்தை ஊட்டிய **சகோதரன் இளங்கோ** அவர்கள் கடந்த 14.05.2021 அன்று கொரோனா நோயின் தாக்கத்தினால் இறைபதமடைந்தார். அன்னாரின் இழப்பில் துயருற்றிருக்கும் உற்றார், உறவினர் களுக்கும் எமது செபங்களுடன்கூடிய ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவித்துநிற்பதுடன் அவரின் ஆன்மா நித்தியத் தில் இளைப்பாற இறைவனிடம் மன்றாடி நிற்கின்றோம்.

## இனப்படுகொலைக்கு நீதி கேட்கும் மக்களோடு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இழைக்கப்பட்ட குற்றங்களுக்கு நீதி கேட்டுப் போராடும் மக்களோடு இணைந்து வடக்கு-கிழக்கு ஆயர்களாகிய நாம் மே 18ஆம் திகதியை இனப்படுகொலையை நினைவு கூரும் நாளாகவும் செப நாளாகவும் அனுசரிக்கும்படியாக வடக்கு-கிழக்கு வாழ் தமிழ் மக்கள் அனைவரையும் வினயமாகக் கேட்டுக்கொள்கிறோம். அத்துடன் இலங்கையில் கடந்த பல தசாப்தங்களாக நடைபெற்ற யுத்தத்திலும் குழப்பங்களிலும் தமது உயிர்களை இழந்த அனைவரையும் நினைவுகூர்ந்து செபிக்கும்படியாகவும் கேட்டுநிற்கின்றோம். அனைத்துப் பங்குத் தந்தையர்களையும், துறவறக் குழுமங்களையும், மத நிறுவனங்களுக்குப் பொறுப்பானவர்களையும்பின்வரும்அறிவுறுத்தல்களைப்பின்பற்றுமாறு கேட்டுக்கொள்கிறோம்.
திகதி: மே 18 2021 செவ்வாய்க்கிழமை மாலை 6 மணி - ஆலயங்களில் மூவேளைச் செப மணியோசை எழுப்புதல் -
மக்களை செபிக்க அழைத்தல். ஈகைச் சுடர் ஏற்றுதல் இரண்டு நிமிட அக வணக்கம் இறந்தோர், பாதிக்கப்பட்டோர், துன்புறுவோரை நினைத்து மௌன செபம். 6.15 - இறந்தோரை நினைவுகூர்ந்து துக்க மணி ஒலித்தல் (கொவிட் 19 சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றவும்)

இவ்வேளையில் மக்கள் தங்கள் இல்லங்களில் இருந்தவாறு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செய்யவும் செபிக்கவும் அறிவுறுத்தவும் என வடக்குக் கிழக்கு ஆயர்களான பேரருட்கலாநிதி கி. நோயல் இம்மானுவெல் (திருகோணமலை மறைமாவட்ட ஆயர்), பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் (யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர்),

## உலகப்போரை....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பண்டத்தரிப்பு புனித பத்திமா அன்னை திருத்தலத்தில் வருடாந்தத் திருநாள் தற்கால சூழ்நிலைக்கேற்ப பக்தர்கள் இல்லாமல் தொலைக்காட்சி, இயைணத்தளங்கள் வழியாகப் பத்து நாட்களும் நேரடியாக ஒளிபரப்பு செய்யப்பட்டன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அமல மரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்பணி. ஜீவா போல் அடிகளாரால் முதல் ஒன்பது நாட்களும் சிறப்பான மறையுரைகள் ஆற்றப்பட்டன. திருத்தலப் பரிபாலகர் அருட்பணி. மைக்கல் சவுந்தரநாயகம் அடிகள் அனைத்து ஏற்பாடுகளையும் சிறப்பாக மேற்கொண்டிருந்தார்.

## மே 18 இனப்படுகொலை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நினைவு எம்மைப் பொறுத்த வரையில் பழிவாங்கலோடு சம்பந்தப்பட்டது அல்ல. அது நீதியோடும் பொறுப்புக் கூறலுக்கும் எமது எதிர்காலத்தோடும் சமபந்தப்பட்டது. மே 18 அன்று பின்வரும் நான்கு காரியங்களை வீட்டில் இருந்து செய்யுங்கள் என நாம் கோருகின்றோம்:

1. உங்கள் பிள்ளைகள், சகோதர சகோதரிகள், இளம் பராயத்தவரோடு சில மணி நேரம் செலவளித்து ஏன் இந்தப் இனப்படுகொலை எம்மீது கட்டவிழ்த்து விடப்பட்டது, விடப்படுகின்றது என்பது தொடர்பில் உரையாடுங்கள். அரசியல் பேசுங்கள், பேசப் பழக்குங்கள்
2. அனைத்து மின்சார ஒளிர்ப்புகளையும் அணைத்து, இருளேந்தி, ஒரு விளக்கை உங்கள் வீட்டு எல்லையில், தூணில் இரவு 6 மணிக்கு எரிய விடுங்கள். அதனை ஏன் ஏற்றினீர்கள் என உங்கள் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுங்கள்.
3. ஒரு வேளையாவது சாதாரண கஞ்சி செய்து சாப்பிடுங்கள். ஏன் இன்று கஞ்சி குடிக்கி றோம் என்பதனைப் பிள்ளைகளுக்கு விளங்க கப்படுத்துங்கள்.
4. உங்கள் நம்பிக்கை எதுவாயினும் உங்கள் பிரார்த்தனையில் உயிர் நீத்த அனைவரின தும் அமைதிக்காகப் பிரார்த்தனை செய்யுங்கள் என அவ்வறிக்கை அமைகின்றது.

# தூய ஆவியானவர் எமக்கு யார்?

அன்பானவர்களே, "தந்தையிடமிருந்தும் மகனிடமிருந்தும் புறப்படுபவரும் வாழ்வு அளிப்பவருமான தூய ஆவியை நம்புகின்றோம்" என எங்களுடைய நம்பிக்கையை, எங்களுடைய விசுவாசத்தை அப்போஸ்தலிக்க மற்றும் நிசேயா விசுவாசப் பிரமாணங்களிலே நாம் அறிக்கையிடுகின்றோம். மீட்பை எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் நாங்கள் எம்மை ஒருதடவை நிறுத்தி மீளாய்வு செய்து பார்க்க அழைக்கப்படுகின்றோம். "நான் உண்மையிலேயே தூய ஆவியாரை நம்புகின்றேனா?"

எமது கத்தோலிக்க விசுவாசம் சிறப்பான தொன்று. ஆனால் மனிதக் கண்களுக்கும் அறிவிற்கும் சிக்கலானதும் மற்றும் சவாலானதொன்று. எம்மவரிடையே பொதுவானதொரு வார்த்தைப்பிரயோகம் 'இது சாத்தியப்டுவதற்கு வாய்ப்பில்லை. இது உண்மையாக இருக்கமுடியாது. ( Too Good to Be True ) தந்தை, மகன், தூய ஆவியார் என்ற மூன்று பேர், ஆனால் ஒரே கடவுள் என்ற அற்புதமான விசுவாசத்தைத் தியானிப்பது எவ்வளவு சிறப்புத் தெரியுமா? எங்களுடைய நம்பிக்கை மற்றும் விசுவாசம் எமது வாழ்வியலோடு ஆட்டம் காண கூடியது தான். அதனால் தான் எமக்கு ஒரு துணையாளர் தேவைப்படுகின்றார்.

ஆண்டவர் இயேசு தன்னுடைய மகிமை வாய்ந்த திரு அவையைத் தன்னுடைய 11 சீடர்களிடமும் ஒப்படைத்துவிட்டு விண்ணேற்றமடைந்தார். பதினொரு பேரும் தங்களைச் சுற்றி என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள முடியாத நிலையில் இருந்தார்கள். மூன்று வருடங்களாக அவர்களோடு உடனிருந்து அற்புதங்களை, அதிசயங்களைச் செய்த அசாதாரண மனிதன் இன்று அவர்களோடு இல்லை. கற்பனை செய்து பாருங்கள். திடீரென ஒருவர் இந்த உலகுக்கான முழு நற்செய்தியையும் உங்களுடைய கரங்களிலே ஒப்படைத்தால் உங்களால் என்ன செய்திட முடியும். அதே நிலையில் தான் அந்தப் பதினொரு வாலிபர்களும் இருந்தார்கள். குலை நடுங்கிப்போனார்கள். அச்ச உணர்வு அவர்களை ஆட்கொண்டது. வெளியிலே நடமாடுவதற்கு அஞ்சி எருசலேமிற்குத் திரும்பிச் சென்றார்கள். எந்த மேல்மாடியில் ஆண்டவர் இயேசு அவர்களுடைய பாதங்களைக் கழுவினாரோ, எந்த மேல்மாடியில் ஆண்டவர் இயேசு தன்னுடைய இறுதி இராப்போசனத்தை அவர்களோடு உண்டாரோ, எந்த மேல் மாடியில் ஆண்டவர் இயேசு நற்கருணை மற்றும் குருத்துவத்தை ஏற்படுத்தினாரோ, அந்த மேல் மாடிக்குள் சென்று கதவுகளைப் பூட்டிப் பத்து நாட்கள் அதற்குள்ளேயே இருந்தார்கள். அதனை விட்டு வெளியேறவில்லை. ஏன்? இங்குதான் எங்களுடைய விசுவாசத்திற்கு நம்பிக்கைக்கு அழகியதொரு பதில் கிடைக்கின்றது. **"இதோ என் தந்தை வாக்களித்த வல்லமையை உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்கள் உன்னதத்தில் இருந்து வரும் அவ்வல்லமையால் ஆட்கொள்ளப்படும் வரை இந் நகரத்திலேயே இருங்கள்"** (லூக்கா 24:49) என்ற ஆண்டவர் இயேசுவின் வார்த்தை மெய்ப்படக் காத்திருந்தார்கள். அதனால் தான் நாமும் ஆண்டவர் இயேசுவினுடைய விண்ணேற்புக்கும் பெந்தகோஸ்துக்கும் இடையில் பத்து நாட்கள் எங்களைத் தூய ஆவியாரின் வருகைக்காக ஆயத்தப்படுத்துகின்றோம். இந்த நாட்களிலே விசேட விதமாகத் தூய ஆவியானவரைக் குறித்துச் சிந்திக்க அழைக்கப் படுகின்றோம்.

### யார் இந்தத் தூய ஆவியானவர்?

**1.தந்தையோடு இருந்தவர், இருப்பவர்.**

★ தொடக்கத்தில் கடவுள் விண்ணுலகையும் மண்ணுலகையும் படைத்த பொழுது மண்ணுலகு உருவமற்று வெறுமையாய் இருந்தது. ஆழத்தின் மீது இருள் பரவியிருந்தது. நீர்த் திரளின் மேல் கடவுளின் ஆவி அசைந்தாடிக்கொண்டிருந்தது. (தொடக்க நூல் 1:1-2)

**2.மகனோடு இருந்தவர், இருப்பவர்.**

★ இயேசு தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு யோர்தான் ஆற்றைவிட்டுத் திரும்பினார். (லூக்கா 4:1).

★ இயேசு தூயஆவியின் வல்லமை உடையவராய் கலிலேயாவுக்குத் திரும்பிப் போனார். (லூக்கா 4:14).

★துாய ஆவி புறாவடிவில் தோன்றி அவர் மீது இறங்கியது. (லூக்கா 3:22)

**3.நம்மோடும் இருப்பவர்.**

★ உங்கள் உடல் நீங்கள் கடவுளிடமிருந்து பெற்றுக் கொண்ட தூய ஆவி தங்கும் கோவில் என்று உங்களுக்குத் தெரியாதா? நீங்கள் உங்களுக்கு உரியவர் அல்ல. (1கொரிந்தியர் 6:19)



வி.யே.ஜெசுதாஸ்
புகுமுகமெய்யியல்

**4.நம்மை இறைவனின் பிள்ளைகளாக்குபவர்.**

பலதடவைகளில் நாம் தூய ஆவியானவரைக் சாதாரணமாக எடைபோட்டு விடுகின்றோம். ஆனால் வேதாகமத்திலே தூய ஆவி யானவர் பற்றி நாம் காணும் ஒவ்வொரு வார்த்தைகளும் அவர் மீதான எம் நம்பிக்கையை ஆழப்படுத்துகின்றன. தூய பவுல் அடிகளார் இவ்வாறு சொல்லுகிறார்.

★ கடவுளின் ஆவியால் இயக்கப்படுகிறவர்கள் மாத்திரமே கடவுளின் மக்கள்.(உரோமையர் 8:14)

★ நீங்கள் பிள்ளைகளாய் இருப்பதால் கடவுள் தம் மகனின் ஆவியை உங்களுக்குள் அனுப்பியுள்ளார். அந்த ஆவி 'அப்பா தந்தையே' எனக் கூப்பிடுகிறது. (கலாத்தியர் 4:6)

**5. நமக்காகத் தந்தையிடம் பரிந்து பேசுபவர்**

துாய ஆவியார் நமது வலுவற்ற நிலையில் நமக்குத் துணை நிற்கின்றார். ஏனெனில் எதற்காக, எப்படி இறைவனிடம் வேண்டுவது என்று எமக்குத் தொியாது. தூய ஆவியார் தாமே சொல்வடிவம் பெற முடியாத நம்முடைய பெருமூச்சுக்களின் வாயிலாய் நமக்காகப் பரிந்து பேசுகிறார். (உரோமையர் 8:26)

**6.எம் மீட்பின் அடையாளம்**

★ நீங்களும், உங்களுக்கு மீட்பு அளிக்கும் நற்செய்தியாகிய உண்மையின் வார்த்தையைக் கேட்டு, அவர் மீது நம்பிக்கை கொண்டு வாக்களிக்கப்பட்ட தூய ஆவியால் அவருக்குள் முத்திரையிடப்பட்டீர்கள். அந்தத் தூய ஆவியே நாம் மீட்படைந்து உரிமைப்பேறு பெறுவோம் என்பதை உறுதிப்படுத்தும் அடையாளமாக இருக்கிறது. (எபேசியர் 01:13-14)

**7. எம் துணையாளர்**

★ உங்களோடு என்றும் இருக்கும்படி மற்றொரு துணையாளரை உங்களுக்குத் தருமாறு நான் தந்தையிடம் கேட்பேன். தந்தை அவரை உங்களுக்கு அருள்வார். அவரே உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார். (யோவான் 14:16-17)

**8. எம்மை வழிநடத்துபவர்**

★ தந்தை படைப்பவர். மகன் மீட்பவர். தூய ஆவியார் வழிநடத்துபவர் என்பது நாம் அறிந்த வாக்கன்றோ!

**9. எம் விசுவாசத்தை அறிக்கையிடச் செய்பவர்**

★ கடவுளின் ஆவியால் ஆட்கொள்ளப்பட்டுப் பேசும் எவரும் 'இயேசு சபிக்கப்பட்டவர்' எனச் சொல்ல மாட்டாஉ. தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டவரன்றி வேறு எவரும் 'இயேசுவே ஆண்டவர்' எனச் சொல்ல முடியாது. (1கொரிந்தியர் 12:3-4)

**10. ஒருமைப்பாட்டின் ஊற்றானவர்**

★ அமைதியுடன் இணைந்து வாழ்ந்து தூய ஆவியார் அருளும் ஒருமைப்பாட்டைக் காத்துக் கொள்ள முயற்சி செய்யுங்கள். (எபேசியர் 4:3)

தூய ஆவியானவர் குறித்துச் சிந்திக்கின்ற பொழுது நம் ஆண்டவர் இயேசு ஆவியானவர் குறித்துக் கூறிய ஒரு வார்த்தைப் பகுதியைத் தியானிப்பது சாலச் சிறந்தது.

**"நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். ' தூய ஆவிக்கு எதிரான பழிப்புரை மன்னிக்கப்படாது. மக்களுடைய மற்றப் பாவங்கள், பழிப்புரைகள் அனைத்தும் மன்னிக்கப்படும். மானிட மகனுக்கு எதிராக ஏதாவது ஒருவார்த்தை சொல்லிவிட்டவரும் மன்னிக்கப்படுவார். ஆனால் தூய ஆவிக்கு எதிராய்ப் பேசுவோர் இம்மையிலும் மறுமையிலும் மன்னிப்புப் பெறமாட்டார்'." (மத்தேயு 12:32)**

ஒருமுறை பேதுரு ஆண்டவரைப் பார்த்து **"ஆண்டவரே என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவர் எனக்கு எதிராகப் பாவம் செய்து வந்தால் நான் எத்தனை முறை அவரை மன்னிக்க வேண்டும்? ஏழுமுறை மட்டுமா?"** என்று கேட்டார். அதற்கு இயேசு அழகான பதில் ஒன்றைச் சொன்னார். **"ஏழுமுறை மட்டுமல்ல. எழுபதுதடவை ஏழு முறை"** என்றார். அதே ஆண்டவர் இன்று எனக்கும் உங்களுக்கும் சொல்லுகின்றார். தூய ஆவிக்கு எதிரான பழிப்புரை எதுவும் இம்மையில் மாத்திரமல்ல. மறுமையிலும் மன்னிக்கப்பட மாட்டாது.

அன்பானவர்களே ஆவியானவருடைய வருகையை எதிர்பார்த்திருக்கின்ற நாங்கள் ஆவியானவரால் ஆட்கொள்ளப்பட வேண்டும் என்றால் எங்களிடைய மூன்று முக்கியமான பண்புகள் அடிப்படையாக இருக்க வேண்டும்.

**1. ஆவியானவர் மீதான தாகம் /வாஞ்சை**

★ திருவிழாவின் இறுதியான பெருநாளில் இயேசு எழுந்து நின்று உரத்த குரலில் , "யாரேனும் தாகமாய் இருந்தால் என்னிடம் வரட்டும்: என்னிடம் நம்பிக்கை கொள்பவர் பருகட்டும். மறைநூல் கூறுவது போல் அவருடைய உள்ளத்திலிருந்து வாழ்வு தரும் தண்ணீர் ஆறாய்ப் பெருக்கெடுத்து ஓடும்" என்றார். தம்மிடம் நம்பிக்கை கொண்டிருப்போர் பெறப்போகும் தூய ஆவியானவர் குறித்தே அவர் இவ்வாறு சொன்னார். (யோவான் 7:37-39)

**2. காத்திருப்பு**

★ **இயேசு அவர்களோடு சேர்ந்து உண்ணும் போது அவர்களிடம், "நீங்கள் எருசலேமை விட்டு நீங்க வேண்டாம். என்னிடமிருந்து கேட்ட தந்தையின் வாக்கு நிறைவேறக் காத்திருங்கள்." (திருத்தூதர் பணிகள் 1:4)**

**3. செபம்**

★ அவர்கள் அனைவரும் சில பெண்களோடும், இயேசுவின் சகோதரர்களோடும், அவருடைய தாய் மரியாவோடும் இணைந்து ஒரே மனத்தோடு இறைவனிடம் வேண்டிக் கொண்டிருந்தார்கள். (திருத்தூதர் பணிகள் 1:14)

★ தீயோர்களாகிய நீங்களே உங்கள் பிள்ளைகளுக்கு நற்கொடைகள் அளிக்க அறிந்திருக்கிறீர்கள். அப்படியானால் விண்ணகத்தந்தை தம்மிடம் கேட்போருக்கு தூய ஆவியைக் கொடுப்பது எத்துணை உறுதி (லூக்கா 11:12)

வாரும் தூய ஆவியே !

**'உம் பிரசன்னத்தை வாஞ்சிக்கின்றோம்.**
**வல்லமையால் எம்மை நிரப்பி**
**ஆளுகை செய்யும்.**

# இயேசுவின் நற்கருணை பிரசன்னத்தினால் கத்தோலிக்கத்திற்கு ஈர்க்கப்பட்ட அங்கிலிக்கன் பெண்மணி

**சோ**பி அங்கிலிக்கன் மதத்தைச் சேர்ந்த ஆங்கிலேயப் பெண்மணி அவரது தந்தை அங்கிலிக்கன் பாதிரியார். தாயார் மரினா அங்கிலிக்கன் சமயத்தை அதன் இறுகக்மான சட்டதிட்டங்களுடன் கடைப்பிடித்து வாழ்ந்த பரம்பரையில் வந்தவர். திருத்தந்தையை வெறுப்புடன் நோக்கியவர். தென்மேற்கு இங்கிலாந்தின் றிங்ரன் நகரில் வசித்த இவர்களது குடும்பம் பாதிரியார் கென்றி டானியேல் அவர்களன் பணி காரணமாக இங்கிலாந்திலிருந்து வெளியேறி அயல் நாடுகளில் வசிகக் வேண்டி நேரிட்டது. இவ்வாறு கொன்ஸ் தாந்திநோபிளில் வசிக்கும் போது சோபி பிறந்தார். எதென்சின் அருகிலுள்ள அழகிய தீவுகளில் சோபியின் பிள்ளைப்பருவமும் இளமைப்பருவமும் பெரும்பாலும் கழிந்தது. இவ்வாறு வெளியூர்களில் வாழும் வாய்ப்பு சோபிக்குக் கத்தோலிக்கத்தை அறிமுகப்படுத்தியது. சோபியும் அவரது சகோதரிகளும் சிறுவயதில் இருந்தே நல்ல கிறிஸ்தவ பண்புகளுடன் வளர்க்கப்பட்டவர்கள். பாதிரியான தந்தையும் தாயும் செபிப்பதைப் பார்த்து செபிக்கக் கற்றுக் கொண்டார்கள். தந்தை டானியேல் கிரேக்க மற்றும் எபிரேய மொழிகளில் வேதாகமத்தை வாசித்துத் தேர்ந்தார். பிள்ளைகளும் வேதாகமம் வாசிகக் வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுத்து ஆர்வமூட்டியவர். இவ்வாறு இறை விசுவாசமும் இறை பக்தியும் கொண்டிருந்தவர்கள் அத்துடன் பிறர் அன்பும் இவர்கள் வாழ்வில் பிரதிபலித்தது. பிள்ளைப்பருவத்திலேயே சிறிய சிறிய ஒறுத்தல்கள் செய்யவும் அதைச் சேமித்து ஏழைகளுக்கு உதவி செய்யவும் பழகியருந்தார்கள். சோபி ஏழைகளையும் தம்மைப் பராமரித்த செவிலி போன்றோரையும் மதிக்கவும் அன்பு செய்யவும் பிறருடன் பண்புடன் பழகவும் தாயிடமிருந்து பழகிக்கொண்டிருந்தார்.

பாதிரியாரான கென்றி டானியேல் புனித பூமியான இஸ்ராயேல் நாட்டிற்கு யாத்திரை சென்றிருந்த வேளையில் திடீர் மரணமுற்றார். தொடர்ந்து மூத்த சகோதரன் கென்றி தாயுடன் இணைந்து குடும்பத்தை வழிநடத்தினார். தனது பட்டுப்பூச்சி வளர்ப்புத் தொழில் காரணமாகக் கென்றி நேபிள்ஸ் நட்டிற்குச் செல்ல நேர்ந்தது. குடும்பமும் அங்கு கென்றி குடியேறியது. புரட்டஸ்தாந்து கோவில்கள் நேப்பிள்ஸ் நகரில் இல்லாததால் சோபியும் அவரது இரு சகோதரிகளும் கத்தோலிக்க ஆலயத்திற்கே சென்று வந்தனர்.

**கத்தோலிகத்தில் சோபி**

தாம் பெற்ற கல்வியையும் மறை அறிவையும் தமக்கு அயலில் வாழ்ந்த ஏழைகளுக்குத் தனது சகோதரிகளுடன் சேர்ந்து கற்றுக்கொடுத்தார். இவ்வாறு நற்பண்புகளை கொண்டு வளர்ந்த சோபியின் உள்ளம் செபத்திலும் ஞாயிறு மறை உரைகளைக் கேட்பதிலும் அதிக நாட்டம் காட்டத் தொடங்கியது. கத்தோலிக்க படிப்பினைகள், சடங்குகள் பற்றிய நூல்களைப் படிப்பதில் அவளும் அவரது சகோதரி மேரியும் அதிக ஆர்வம் காட்டினார். கத்தோலிக்க மதத்தை நோக்கி தமது உள்ளம் ஈர்க்கப்படுவதை உணர்ந்தார். இவ்வாறாகப் பண்பட்ட நிலமான அவர்கள் உள்ளத்தில் கத்தோலிக்க விதை வேரிட்டது. புதிதாக அறிமுகமான சமயத்திற்கு வழிகாட்ட யாரும் இல்லாத நிலையிலும் இறைவனை நாடி கத்தோலிக்க ஆலயங்களுக்குத் துணிந்து சென்றனர்.

சோபியின் வாழ்வில் கத்தோலிக்க மதத்தின் மீதான ஆர்வம் பெரும் திருப்பத்தை ஏற்படுத்தியது. இளம்யுவதியான சோபிக்கு கடற்படையில் பணியாற்றும் இளைஞர் ஒருவருடன் திருமணம் நிச்சயம் செய்யப் பட்டிருந்தது. இருப்பினும் சோபியின் உள்ளமோ பெரிதும் இறைவனை நாடிச் சென்றது.

தன்னை ஏதோ ஒரு சக்தி கத்தோலிகக் ஆலயத்தை நோக்கி ஈர்ப்பதை அவர் வெளிப் படுத்தினார். இவ்வாறு சோபியின் உள்ளத்தை கவர்ந்தது இறைஇயேசுவின் நற்கருணைப் பிரசன்னமே. புரட்டஸ்தாந்து ஆலயங்களில் இல்லாத இந்த உன்னத பிரசன்னத்தினால் சோபியின் உள்ளம் பெரிதும் கவரப்பட்டது மட்டுமன்றி அடிக்கடி நற்கருணைப் பிரசன்னத்தில் செபிப்பதில் ஆழமான ஆன்ம நிறைவையும் அவர் கண்டார். அதுமட்டுமன்றி தான் கத்தோலிக்கத்தில் சேர்ந்து எப்போதும் இறைவனுடன் வாழும் வகையில் ஒரு துறவியாக வேண்டும் எனும் ஆழமான தனது விருப்பத்தையும் இறைவனிடம் கூறிச் செபித்து வந்தார்.

தகுந்த சந்தர்ப்பம் உருவாகிய போது தனது விருப்பத்தை நேர்மையுடனும் துணிவுடனும் திருமண நிச்சயம் செய்யப்பட்டிருந்த இளைஞனுக்குத் தெரிவித்தார். திருமண நிச்சயத்திலிருந்து விலக்குப் பெற்றுக்கொண்டார். நற்கருணை அருட்சாதனம் மட்டுமன்று பாவசங்கீத்தனமும் சோபியையும் அவரது தங்கை மேரிஆனையும் கவர்ந்தது. சோபி தான் எப்படியாவது பாவசங்கீத்தனம் செய்து தனது உள்ளத்திலுள்ள பாரங்களை இறக்கிக் கொள்ளப் பெரும் ஆவல் கொண்டவராக இருந்தார்.

இவர்கள் ஆசையை நிறைவேற்ற இறைவன் கொண்டிருந்த திட்டம் படிப்படியாக நிறைவேறத் தொடங்கியது. சோபிக்குக் குடும்பமாக மோல்டாவுக்குச் செல்ல சந்தர்ப்பம் உருவாகியது. அங்கு அவர்கள் இருந்த காலத்தில் அங்கே புரட்டஸ்தாந்து சமயத்துடன் இணைந்து ஏழைகளுக்கு உதவி செய்யும் கத்தோலிக்க சங்கம் ஒன்றுடன் அவர்களுக்குத் தொடர்பு ஏற்பட்டது. அங்கே திருமதி டொமெக் என்பவர் மூலம் இயேசு சபைக் குருவான சீகிரேவ் அறிமுகம் கிடைத்தது. அவர் மூலம் மேலும் நற்கருணை பற்றித் தெரிந்து பொண்டனர்.





தாய்க்குத் தெரியாமலே 1850ம் ஆண்டு பெப்பிரவரி 2ம் திகதி திருமுழுக்கும், பெற்றுக் கொண்டு நற்கருணையையும் திருப்பலியில் பங்குபற்றி உட்கொண்டனர். நெடுங்காலம் இதை மறைக்க முடியாது போகவே அன்னைக்குத் தெரிய வந்தது. தாயார் மரினா அழுது புலம்பினார். இருப்பினும் சோபியும் அவர் சகோதரியும் தொடர்ந்து ஞாயிறு திருப்பலிக்குச் சென்று வந்தனர் .

சிறிது காலத்தின் பின்னர் மோல்டாவிலிருந்து அத்தென்ஸ் நகருக்குச் சென்றனர். அங்கிருந்த வேளையில் இயுபொயா நகரில் கென்றி நோய் வாய்ப்பட்டார் மகனைப் பராமரிப்பதற்காகத் தாயார் அங்கு செல்ல வேண்டி இருந்தது. பெண் பிள்ளைகள் இருவரையும் பாதுகாப்பாக விடுவதற்கு வழிதேடிய தாயார் சீரேர்ஸ் நகரில் இருந்த புனித சூசையப்பர் சகோதரிகள் மடத்தில் அவர்களைச் சேர்த்து விட்டுச் சென்றார் . இதன் காரணமாக நீண்ட காலம் சோபியும் மேரிஆனும் மடத்திலேயே தங்க வேண்டி இருந்தது. கததோலிக்கத்தை வெறுத்த தாயார் கன்னியர் மடத்திலேயே பிள்ளைகளைச் சேற்க வேண்டிய நிலை. இது இறைவன் செயலே அன்றி வேறென்னவாக இருக்க முடியும்?

**துறவறத்தில் சோபி**

இந்த அரிய வாய்ப்பினைப் பயன்படுத்தி சோபி மேரிஆன் இருவரும் தமது உள்ளார்ந்த ஆசையை அருட்சகோதரிகளுக்கு வெளிப்படுத்தினர். தாயார் மறுப்புத் தெரிவித்தும் இறைவனின் திட்டத்தையே நிறைவேற்ற விரும்பிய சோபியும் தங்கையும் 1851 இல் தங்களை அந்தத் துறவற சபையில் இணைத்துக் கொண்டனர்.

வெரோணிக்கா எனப் பெயர் பெற்று சோபி புனித சூசையப்பர் சபை சகோதரி துறவியாகச் சில வருடங்கள் பணியாற்றி வருகையில் இந்தியாவற்கு மிசனரி யாகச் சென்று பணியாற்ற வேண்டியிருந்தது. இக் காலத்தில் கார்மேல் சபைக்குருவான மாரி ஏப்பிரம் இந்தியாவின் பெண்களுக்குக் கல்வித் தேவையைப் பூர்த்தி செய்யக் கார் மேல் சபை ஒன்றின் தேவையை வெரோணிக்காவிடம் எடுத்துரைத்தார். அவரது விருப்பப்படி செபத்தில் மட்டும் ஈடுபடும் பெண்களுக்கான கார்மேல் துறவற சபை மட்டுமல்லாது வெளிச் சென்று கல்விப் பணி புரியும் கார் மேல் சபை ஆன்மீகம் கொண்ட ஒரு துறவற சபையின் அருட்கொடை, அன்னையின் இறைத்தேடலாகவும், யேசுவின் உடனிருப்பையும், அவிலா திரேசாவின் செப வாழ்வையும் தனது ஆன்மீக தாகமாகவும் கொண்டிருந்த வெரோணிக்காவும் கார்மேல் சபைக்கு தன்னை இறைவன் அழைப்பதை உணர்ந்தார்.

தனது ஆன்மீகக் குருவின் வழிகாட்டலுடன் பிரான்சில் உள்ள கார்மேல் சபையில் இணைந்தார். கார்மேல் துறவியாகி அங்கு இருந்தவாறே இந்தியாவின் பணிக்காக அப்போஸ்தலிகக் கார்மேல் சபையை பிரான்சில் நிறுவி அருட்சகோதரிகளை பணிக்காக இந்தியா கர்நாடக மாநிலத்திற்கு அனுப்பி வைத்தார். கார்மேல் துறவறசபையினரும் இந்தியாவில் தம் பணியைத் தொடங்கினார்.

இவ்வாறாக ஒரு அங்கிலிகக்ன் பாதிரியாரின் மகளாக பிறந்த சோபி கத்தோலிகக்த்தில் இணைந்து துறவற வாழ்வில் நுழைந்து ஒரு துறவறசபையின் ஸ்தாபகராக மாறினார். இந்த அற்புதமான மாற்றத்திற்கு அன்னை வெரோணிக்காவை கவர்ந்தது இயேசுவின் நற்கருணைப் பிரசன்னமே. அது மட்டுமன்றி கத்தோலிக்க திருச்சபையின் விலைமதிக்க முடியாத அருட்சாதனங்களும் இறை உறவில் அவர் வளர பெரிதும் காரணமாய் அமைந்திருந்தன.

இன்று அருட்சாதனங்களை பொருட்டாக மதிக்காது, பாவசங்கீர்த்தனத்தைத் தேடாது ஞாயிறு திருப்பலியையும் நற்கருணை பெறுவதையும் முக்கியமாகக் கருதாது இறைபிரசன்னத்தினை தேடி செபிக்கும் பழக்கங்களை மறந்து மறைக்கல்வியை உதறி ரியூசனுக்கு முன்னுரிமை கொடுக்கும் பிள்ளைகளும் , இளையோர்களும் காணப்படும் எம் சமூகத்திற்கும் திருச்சபையில் அரிய பொக்கிஷங்களை வாழ்வில் அனுபவிக்காது நிறைவையும் நிம்மதியையும் வெளியே தேடிச் செல்லும் எம்மவர்க்கும் நிச்சயமாக நல்ல வழிகாட்டியாக அன்னை வெரோணிக்காவின் வாழ்வு அமைந்து விடுகின்றது.

## உண்மை

உண்மை ஊமையானால் மிஞ்சுவது என்ன? நிச்சயமாக அது பொய் யாகத்தான் இருக்க முடியும். உண்மையை வாழ வைக்க ஒருவர் எத்துணை இடர்களை எதிர் கொண்டாலும், முனைந்து முன்னேறாவிடில், உண்மை உருக்குலைந்து போய் விடாதா? உண்மை உயிரோடு வாழ வேண்டுமாயின், அது மனித மனங்களில் உருப்பெற வேண்டும். உண்மைக்குச் சான்று பகர்வதே என் இலக்கு என்று செயலாக்கம் பெறச் செய்பவனே உருவுக்கு உயிர் கொடுப்பவர். உண்மையாம் இறைவன் இன்று உன்னிடமும், என்னிடமும் கேட்பது, உலகில் பொய்மைக்கு சமாதி கட்டி உண்மைக்கு உயிரூட்டங்கள் இட இன்றே சபதமேற்போம். சத்தியத்தைச் சாத்தியமாக்குவோம். உண்மையே நம்மை விடுவிக்கும்!




# என் கேள்விக்கென்ன பதில்!

**அருட்பணி செ. அன்புராசா**

(மல்லிகா, முல்லைத்தீவு)
**கேள்வி: மே 18 நினைவுகூரலுக்கு அரசு தொடர்ச்சியாகத் தடைகளை ஏற்படுத்திவருவது மிகத் தவறான செயல் அல்லவா?**
ப: மல்லிகா, இது தவறல்ல, தப்பு! பிழையெனத் தெரியாது செய்வது தவறு, தெரிந்து செய்வது தப்பு! இச்செயல், தப்பானது மட்டுமல்ல மிகக் கீழ்த்தரமானது!

*(அருள், யாழ்ப்பாணம்)*
**கே: முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் திடலை இராணுவ புலனாய்வுத்துறை அழித்து அசிங்கப்படுத்துவதன் மூலம் வெளிக்காட்ட விளைவதென்ன?**
ப: அருள், நினைவேந்தல் திடலை அசிங்கப்படுத்தி அழிவுகளை ஏற்படுத்தியதன் மூலம் 2009ல் முள்ளிவாய்க்காலில் தமிழர்களை அரசு அழித்திருக்கின்றது என்பதை ஏற்றுக்கொள்கின்றது. இல்லையென்றால் நினைவுகூரலை அனுமதிக்காமைக்கு வேறு காரணங்கள் கிடையாது!

(தமிழன், கிளிநொச்சி)
**கே: நினைவுகூரலை நீதிமன்றங்களே அனுமதித்திருக்கின்றன! அப்படியிருக்க ஒரு ஜனநாயக நாட்டில் எப்படி அதனை இராணுவம் தடுக்கமுடியும்?**
ப: தமிழன், முதலில், நாட்டில் ஜனநாயகம் இருந்தால்தானே ஜனநாயக ஆட்சி இருக்கமுடியும்! பசுத்தோல் போர்த்த ஓநாயென்று சொல்வார்களே! அதுபோல ஜனநாயகத்தின் போர்வையில் இராணுவ ஆட்சியல்லவா நடக்கின்றது!

(ராஜீ, யாழ்ப்பாணம்)
**கே: நினைவேந்தலைப் பொலிஸ் அனுமதிபெற்றுச் செய்யமுடியாதா?**
ப: ஒன்று, அனுமதி கொடுப்பதற்கு அவர்களுக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்க வேண்டுமே! ஆட்டுவிப்பவன் ஆட்டாமல் அவர்களால் எப்படி ஆடமுடியும்! இரண்டு, அழிக்கப்பட்டவர்களை நினைவுகூர அழித்தவர்களிடமே அனுமதி பெற வேண்டி இருக்கிறது என்றால் நம்முடைய நிலைமை எப்படி இருக்கின்றது என்றும் சிந்தித்துப் பார்க்கவேண்டும் ராஜி!

(யோசவ், யாழ்ப்பாணம்)
**கே: 'வடக்குக் கிழக்கு ஆயர் மன்றம்' மிக முக்கியமான முன்னெடுப்பை மேற்கொண்டிருக்கின்றது. மே 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை ஆலயங்களில் அதிகாரபூர்வமாகச் செய்ய வடக்குக் கிழக்கு ஆயர் மன்றம் அனுமதியளித்து, ஆக்க பூர்வமான ஆலோசனைகளையும் அறிக்கையாக வெளியிட்டிருக்கின்றது. அத்துடன் ஆயர்களே நேரடியாகக் கலந்து இந்நிகழ்வை சிறப்பித்துள்ளனர். இதனை எம் உரிமைகளுக்கான போராட்டத்தில் ஒரு மைல் கல்லாகக் கொள்ளலாமா?**
ப: நிச்சயமாக யோசவ். எத்தனையோ ஆண்டுகளாக நடைபெற்றுவரும் நம் உரிமைப் போராட்டத்தில் நம் ஆயர்களின்பங்கு அளப்பெரியதாக இருந்து வந்திருக்கின்றது. நம் உரிமைகளை வென்றெடுப்பதில் வடகிழக்கு ஆயர்களின் ஒன்றிணைந்த ஒருமித்த முன்னெடுப்புக்கள் முன்மொழியப்பட வேண்டும் என்றிருந்த நீண்டகால வேணவா 2021ம் ஆண்டு மே 18 வெளிப்படையாக முதன் முதலாக வெளிப்பட்டிருக்கின்றது. ஆரம்பமே அந்த மாதிரி! இனி நம் ஆயர்களின் குரல்கள் ஒன்றாக ஓங்கி ஒலிக்குமென எதிர்பார்க்கலாம்.

(ரஞ்சி, மன்னார்)
**கே: வரும் நாட்களில் கொரோனா தீவிரமாகப் பரவலாம் என எதிர்வு கூறுகின்றார்கள்! அதில் உண்மையுண்டா?**
ப: ரஞ்சி, அயல் நாடாகிய இந்தியாவில் என்ன நடக்கிறதென்று செய்திகளில் பார்க்கவில்லையா? பொதுமக்களின் அசட்டையீனம்தான் இவ்வாறான நோய்த்தொற்றுக்கும் வகைதொகையின்றி மக்கள் சாவதற்கும் காரணமெனச் சொல்லப்படுகின்றது. இந்தியாவில் நடப்பது நமக்கு ஒரு பாடமாக அமையவேண்டும். ஆனால், அது பாடமாக அமைவதாகத் தெரியவில்லை! இந்தகைய ஆபத்தான சூழலிலும் பிறந்தநாள் கொண்டாட்டங்களும் சந்திப்புக்களும் நடந்தவண்ணமாகவே இருக்கின்றன. மூச்சுத் தடைப்பட்டு ஒட்சிசன் சிலின்டர்களுக்கு ஓடித்திரியாமல் இப்போதே நம்மைப் பாதுகாத்துக்கொள்வது புத்திசாலித்தனமானது மட்டுமல்ல ஞானம் நிறைந்ததுமாகும்.

(றமேஸ், மன்னார்)
**கே: மறைந்த மன்னார் ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை முன்னெடுத்த நீதிக்கான, உரிமைக்கான பணியில் வடக்குக் கிழக்கு ஆயர் மன்றம் இப்போது கூட்டாக இணைந்திருக்கின்றது எனக் கொள்ளலாமா?**
ப: கொள்ளுங்கள் றமேஸ்! சந்தேகம் வேண்டாம்.

(அன்ரன், யாழ்ப்பாணம்)
**கே: மே 18 முள்ளிவாய்க்கால் நிகழ்வுக்குத் தடைகளை ஏற்படுத்தாமல் விட்டிருப்பின் இந்நிகழ்வு முள்ளிவாய்க்காலோடு முடிந்திருக்கும்! ஆனால், இவ்வாண்டு வட கிழக்குப் பகுதிகளெங்கும் நினைவு கூரக்கூடியதாக அரசின் தடைகளே காரணமாகிவிட்டன. இதனால் யாருக்கு லாபம்?**
ப: அன்ரன், லாப நட்டம் பார்க்க இது வியாபாரமல்ல, நம் உரிமை! அதுபோக, நீங்கள் சொல்வதில் ஓர் உண்மை இருக்கின்றது சில விடயங்களை அதன் பாட்டிலேயே விட்டுவிடுவது புத்திசாலித்தனமானது. அதுதான் அவர்களுக்கு இல்லையே! நாம் என்ன செய்யமுடியும்! நிற்க, சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி என்றொரு பழமொழியைக் கிராமங்களில் சொல்வார்கள். நினைவுகூரலுக்குத் தடைகளை ஏற்படுத்தியவர்கள் ஆண்டி செய்த வேலையைத்தான் செய்திருக்கின்றார்கள்!

(சுகி, யாழ்ப்பாணம்)
**கே: கடந்த பத்திரிகையில் ஆவலோடு எதிர்பார்த்திருந்த தங்களின் 'என் கேள்விக்கென்ன பதில்' பிரசுரிக்கப்படவில்லை. அதற்கு என்ன காரணம்?**
ப: சுகி, உங்களது சின்னக் கோபம் புரிகின்றது. அதற்குப் பத்திரிகை ஆசிரியர் காரணமல்ல என்று சொல்லமாட்டேன்! ஹா...ஹா....ஹா.. ஹா... என்றால் சிரித்தல் என்று பொருள் கொள்ளவும்).

**கேள்விகளைக் கேளுங்கள், பதில்களைப் பாருங்கள்!**

# நாளைய தூண்களை இன்றே கட்டியெழுப்புவோம்

'மனிதர்களின் ஆட்டம் எல்லை மீறும் போது ஆண்டவன் ஆட்டம் தொடங்கும். அந்த ஆட்டம் தான் நடக்கிறது இப்போது..' இவை முகநூலில் நான் வாசித்த என்னைச் சிந்திக்கத் தூண்டிய வரிகள். இன்றைய உலகம் அதீத வளர்ச்சியை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது உலகம் அழிய நேரிடும் போது புதிய இன்னொரு கோளிற்கு சென்று வாழ முயற்சி செய்து கொண்டிருக்கின்றான்.

இன்றைய மனிதன் சமுத்திரங்களை எப்படியோ நிரப்பி சொகுசாக வாழ்வதற்குரிய இடமாக மாற்றிக்கொண்டிருக்கின்றான். இயற்கை மாற்றம் சீற்றம் கொள்வது சாதாரணமான நியதி என்பதை அறிவுள்ள மனிதன் நினைக்கத் தவறிவிடுகின்றான். இந்நிலையில் எமது சமூகத்தை வளர்ச்சிப்பாதையில் வழிநடத்த வேண்டுமாயின் எமது சமூகத்தின் இளைஞர் கையில் தான் இது தங்கியுள்ளது.

இளைய சமுதாயம் தான் நாட்டில் முதுகெலும்பு என்பதற்கேற்ப இளைஞர்கள் தங்களது சக்தியை நல்வழிப்படுத்துவதில் எமது சமூகத்திற்குப் பாரிய பொறுப்புண்டு இன்றைய எம் இளைஞர்களிடம் பாரம்பரிய பண்பாடுகள் நடை உடை பாவனை பழக்கவழக்கங்கள் அருகிவருவதுடன் அவர்களின் செயற்பாடுகள் திசை மாறிச் செல்கின்றது.

இன்றையஇளைஞர்களின்வாழ்க்கைமுகநூல், இணையம், போதைவஸ்துப் பாவனை, குழுமோதல், மதுப் பாவனை, இரக்கமற்ற தீச்செயல்கள் என்பவற்றிற்கு அடிமையாகி அர்த்தமில்லாமல் வாழப்படுகின்றது இளைஞர்களிடம் காணப்படும் சாதிக்கவேண்டும் என்னும் சக்தி சரியான வழிநடத்தல் இல்லாமல் பாதிப்புக்கு உள்ளாகின்றது ஆகவே ஒவ்வொரு இளைஞரையும் கவனிக்கவேண்டிய கடமையும் பொறுப்பும் எம் சமூகத்திற்கு இருக்கின்றது இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாமின் சிந்தனையின்படி வாழ்க்கை என்பது சந்தர்ப்பம் நழுவவிடாதீர்கள் வாழ்க்கை என்பது ஒரு இலட்சியம் சாதியுங்கள் வாழ்க்கை என்பது ஒரு சோகம் தாங்கிக்கொள்ளுங்கள் வாழ்க்கை என்பது ஒரு நீரோட்டம் வென்றுகாட்டுங்கள் வாழ்க்கை என்பது ஒரு ஒரு பயணம் நடத்திமுடியுங்கள்.

இத்தகைய சிந்தனைகளை எம் இளைஞர்களின் உள்ளத்தில் விதைக்க வேண்டும் சமூகத்தில் என்ன நடக்கிறது நாம் எப்படி வாழ்கின்றோம் என்பதை இளையோருக்குத் தெளிவுபடுத்த வேண்டிய தேவை சமூகத்திற்கு இருக்கின்றது தங்களுடைய மொழி பண்பாடு கலாசாரம் போன்றவற்றைப் பாதுகாக்க வேண்டிய தேவை இருப்பதை எமது சமூகம் இளையோருக்கு சுட்டிக்காட்ட வேண்டும். அப்துல்கலாம் கூறியதுபோல இளைஞர்களே கனவு காணுங்கள் உனது பிறப்பு சம்பவமாக இருக்கலாம் ஆனால் இறப்பு சரித்திரமாக இருக்க வேண்டும் என்றும் சிந்தனைகளைச் சாதிக்கத் துடிக்கும் இளையோர்கள் மத்தியில் கொண்டு செல்ல வேண்டிய பாரிய பொறுப்பு எம் சமூகத்திற்கு இருக்கின்றது.

**அருட்சகோதரி றோமலா அன்ரனி (HC)**

மாதா குரு தெய்வம் என்ற ஆன்றோர் வாக்கின்படி எம் முன்னோர்கள் தாய் தந்தையர் சொற்படி கேட்டு நடந்து அவர்கள் காட்டும் பாதையில் சென்றால் இறைவனை அடையலாம்என்றநம்பிக்கையுடன்வாழ்ந்துவாழ்ந்தனர். இதனால் அவர்கள் வாழ்வில் அன்பு பணிவு பொறுமை அடக்கம் விருந்தோம்பல் பண்பு பஞ்சமா பாதகங்கள் செய்யாத மனநிலை என்பன மிளிர்ந்தன. இதனால் அவர்கள் வாழ்வினால் தமிழ் இனத்தவரும் உரிய தனியான ஒரு கலாசாரமும் பண்பாடும் இருப்பதைக்கண்டு மேல் நாட்டவர் வியந்தனர் ஆனால் இன்றைய இளைய தலைமுறையினர் பொருள் தேடுவதற்காக வெளிநாடுகளுக்குச் சென்று "வீட்டில் பூச்சி வெளிச்சத்தைக்கண்டு விண்மீன் செய்தி போல மேல் நாட்டவரின் நடை உடை பாவனைகளையும் கலாசாரத்தையும் இலட்சியமில்லா வாழ்க்கை முறைகளையும் பின்பற்றுகின்றனர். தம்மைப் பத்து மாதம் சுமந்து பெற்றுச் சீராட்டி வளர்த்த தாயையும் தன்சுகம் மறந்து உருவாக்கிவிட்ட தந்தையையும் மறந்து அன்னையும் பிதாவும் பின்னடிக்கு இடைஞ்சல் என புதிய குதர்க்கம் பேசி முதியோர் இல்லங்களில் சேர்ந்து விடுகின்ற நிலை இன்றைய இளம் சமூகத்தினரிடம் சர்வசாதாரணமாகி விட்டது .

மேலும் எவ்வளவோ தொடர்பாடல் வசதிகள் உருவாகியுள்ள போதும் கல்விக்கென நேரத்தினை ஒதுக்கி அவற்றின் மூலம் பயன் பெறுவது குறைந்துள்ளது. அத்துடன் இன்றைய இளைஞர்கள் மேலை நாட்டவரின் தமது கலாசாரத்திற்குப் புறம்பான ஆடைகளை விரும்பி அணிகின்றனர். அத்துடன் இன்றைய இளைய தலைமுறையின் ஆலயம் செல்வதையும், விரதம் (ஒருசந்தி) அனுசரிப்பதையும், தம்மைத் தியாகம் செய்து பிறருக்கு உதவி செய்வதையும் முக்கியமானதாக நினைப்பதில்லை. இப்படியே பார்த்திருந்தால் எமது சமய விழுமியங்களும், தமிழர்களின் பண்பாடும் சில காலத்தில் நம்மை விட்டு மறைந்து விடும். திசைமாறிச் செல்லும் எம் இளம் சமூகத்தைத் திசை திருப்பி நல்வழிப்படுத்தப் பெரியோர்கள் முன்வர வேண்டும்.

இன்றைய இளைஞர்களிடம் செல்போன் மோகம் அதிகரித்தமையால் சிறிய வயதிலேயே காதல் வசப்பட்டு கல்வி, விளையாட்டுத் துறைகளில் சாதிக்கத் தவறி விடுகின்றார்கள். (தொடர்ச்சி 11 ம் பக்கம்)

காவலன் கலசம்

# "வட - கிழக்கு ஆயர் மன்றம்"

## நினைவுகள் சாவதில்லை

இத் திங்கள் 18ம் நாளை போரின் இறுதிக்கட்டத்தில் உயிரிழந்த ஆயிரக் கணக்கான தமிழ் மக்களை, உயிரோ டிருக்கும் தமிழ் இனம் கவலையோடு நினைவு கூருகிறது. இப்படிப்பட்ட போர் களில் உயிரிழந்தோரின் நினைவாக ஓர் அடையாளச் சின்னமாக, ஒரு பொதுத் தூபியைக் கட்டுவது நாகரீக நாடுகளில் இருந்து வரும் ஒரு நல்ல பழக்கம். நாக ரிகமற்றவர்கள், அதுவும் ஓர் இனவெறி-யோடு வாழ்பவர்கள் இந்தத் தூபிகளை இடித்து அழிப்பது மனிதாபிமான பழக்க மல்ல. ஆனால், நினைவுகளை எந்த வெறி யினாலும் அழிக்க முடியாது. ஆங்கிலக் கவிஞன் ஜோன் கீட்ஸ் எழுதினான் "நினைவுகள் சாவதில்லை". ஈழத்தில் உள்ள தமிழினம் முற்றாக அழிக்கப்பட் டாலும், ஈழத்துக்கு வெளியே வாழும் தமிழினம் இந்த இன அழிப்பை எந் நாளும் நினைவில் கொள்ளும். அற்ப புத்தியுள்ளோர் இந்த உண்மையைப் புரிந்து கொள்ளமாட்டார்கள். அவர்களது இனவெறி, அவர்களது குற்ற உணர்வு அவர்களைத் துரத்திக் கொண்டேபோகும். அவர்களும் ஓடிக்கொண்டே இருப்பார்கள். ஆனால்,இவர்களின் ஓட்டத்துக்கும் ஓர் எல்லையுண்டு.

## தமிழ் மக்களின் வலிமையான குரல்

அண்மையில் இறந்த மன்னார் மறை மாவட்ட ஆண்டகை முன்னை நாள் ஆயர் இராயப்பு ஜோசப் அவர்க ளுக்கு ஆற்றிய, எழுதிய இரங்கல் உரைகளில் சொல்லப்பட்ட விடயமொன்று என்னவெனில், "தமிழ் மக்களின் வலி-மையான சிவில் குரலாக விளங்கியவர், இராயப்பு ஜோசப்" இதனாலேயே தமிழ் கூறும் நல்லுலகு சமயத்தைக் கடந்து ஆயர் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தியது. ஆயினும், ஆயர் அவர்க ளுக்கு அஞ்சலி செலுத்தாது மௌனித்த தமிழ்த் தலைவர்களை தமிழினம் அடையாளம் காணத் தவறவில்லை.

ஆயரை ஒரு கத்தோலிக்க ஆயரென்ற நிலையில் யாரும் அவருக்கு அஞ்சலி செலுத்தவில்லை. ஈழத் தமிழ ரின் உரிமைக் குரலாக ஒலித்த ஒரே காரணத்தினால் தமிழுலகு அவருக்கு அஞ்சலி செலுத்தியது. அதேவேளை, அந்த உரிமை கேட்ட குரல் அடங்கி விட்டது, மறைந்து விட்டது என்ற ஏக்கமும் அந்த இரங்கல் உரைகளில் இழையோடியது.

தமிழினப் படுகொலை வெவ் வேறு வடிவங்களில் படிப்படியாக நடந்து கொண்டிருக்கும் இந்த வேளையில் நமக்குக் குரல் கொடுப்பது யாரென்ற ஏக்கம் அந்த இரங்கல் உரையில் கேட்காமல் இல்லை. இந்த ஏக்கக் குரல் வடகிழக்குக் கத்தோலிக்க ஆயர்களுக்கும் கேட்டிருக்க வேண்டும்.

## தலைமைத்துவம்

சிலர் தலைமைத்துவப் பண்புக ளுடன் பிறந்து வளர்கிறார்கள். வேறு சிலர் சந்தர்ப்ப சூழலினால், ஓர் இனத்தின் அவலத்தினால் ஒரு வகை சவாலுக்கு முகம் கொடுக்க வேண்டிய அவசியத்தினால் தலைவர்களாக முகிழ்ந் தெழுகின்றனர். ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை அவர்களுடைய வலிமை யான சிவில் குரல் இத்தகையதே. இக்கட்டுரையாளர் ஒரு வலயத் தளத்திற்குப் கொடுத்த பேட்டி ஒன்றிலும் இதையே குறிப்பிட்டுள்ளார்.

## இன்னுமோர் வலிமையான சிவில் குரல்

இன அழிப்பின் - சாவின் விழிம் பில் நின்று கொண்டு ஈழத் தமிழினம் எழுப்பும் குரலை, வாழத் துடிக்கும் ஓரினத்தின் துடிப்பை வட-கிழக்கு ஆயர் கள் கேட்டிருக்க வேண்டும். இங்கு ஒரு வலிமையான தலைமைத்துவம் அதுவும் ஒரு கூட்டுரைத் தலைமைத்துவம்




முகிழ்ந்துள்ளது. "இத் திங்கள் 18ம் நாளை ஓர் இனப்படுகொலை நாளாக அனுஷ்டிக்க ஒட்டுமொத்தத் தமிழினத்தை வடகிழக்கு ஆயர் மன்றம் கேட்டுள்ளது. (தினக்குரல் 12.05.2021 பக்.5)

இது ஒரு சாதாரண அறிக்கை அல்ல. இந்த அறிக்கையில் ஒரு சில ஐதார்த்தங்களை கோடிட்டுக் காட்ட விரும்புகின்றேன். முதலாவது "தமிழினப் படுகொலை" என்ற சொற்பதம். இரண்டாவது அரசி யல் தீர்வில் வடகிழக்கென்று பல ஆண்டுகளாக அரசியல் வாதிகள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் வடகிழக்கென்று ஆயர்கள் ஒன்றுகூடி ஓர் "ஆயர் மன்ற"மென தம்மைத் தாமே அழைத்துக் கொண்டார்கள். மூன்றாவது - வடகிழக்கு தமிழ்க் கத்தோலிக்க மக்களுக்கல்ல, ஒட்டுமொத்த தமிழி னத்தையும் அழைத்துள்ளார்கள். இப்படிப்பட்ட ஒரு நேர்மறையான துணி வான அறிக்கைக்கு சமயப் பூச்சுப் பூசி தமிழினத்தை மேலும் பிரிக்க முனை கிறார்கள். ஒரு மிகக் குறுகிய மனப்பான் மையுடையோர். ஈழத் தமிழினத்தின் உரிமைக்குரல், நீதிகோரும் குரல் எங் கிருந்து வந்தாலும் அதை வரவேற்க, ஆதரவு கொடுக்க சாதி, சமய வேறு-பாடுகளை மேவி பரந்தளவில் சிந்திக்கத் தமிழினம் முன்வரவேண்டும். வட கிழக்கு ஆயர் மன்ற அறிக்கைக்கு சமயப் பூச்சு போடுவோர் சிந்திக்க வேண்டிய ஒன்று என்னவெனில், ஒரு தனிமனித அறிக்கைக்கும், ஒரு தனி கத்தோலிக்க குரவரின் அறிக்கைக்கும் அல்லது எந்தவொரு மதத்து தனிமனித அறிக்கைக்கும், ஒரு தனி ஆயரின் அறிக்கைக்கும், நான்கு ஆயர்கள் அதுவும் தமிழினத்தின் இருப்பிடமான வடகிழக்கு ஆயர்களின் அறிக்கைக்கும் பாரிய வேறுபாடுண்டு. இந்தக் கட்டுரை யாளரின் அனுபவ சிந்தனைப்படி இந்த வடகிழக்கு ஆயர் மன்ற அறிக்கை உலகளாவிய ரீதியில் ஒரு வலிமை உடைய செல்வாக்கைப் பெறும். பல்வேறு அரசு சார்பற்ற நிறுவனங்களால் மேற்கோள் காட்டப்படும். தமிழ்நாட்டு ஆயர் அவைக்கு இந்த அறிக்கை ஈழத் தமிழ ரின் இன அழிப்பை எடுத்துரைக்கும்.

இப்படிப்பட்ட ஓர் ஆயர் மன்றத் தைப் பல வருடங்களுக்கு முன்னர் முன் மொழிய முனைந்தவர் முன்னைநாள் யாழ் ஆயர் வ.தியோகுப்பிள்ளை ஆண் டகை அவர்கள். ஈழத்து ஆயர் அவை பெரும்பாலும் ஒரு சிங்கள ஆயர் அவை யாகவே செயற்பட்டு வந்துள்ளது. சில மறைமாவட்டங்களில் தமிழ் மக்கள் செறிந்து வாழும் இடங்களில் தமிழில் வழிபாடு நடத்த உரிமையின்றி இருக்கி றார்கள். 1970 களிலே-யே இக்கட்டுரையாளர் இந்தத் தமிழ்த்து வேஷத்தை நேரடியாக அனுபவித்தவர். ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகை இதையே ஆயர் பேரவையில் அனுபவித்தவர். இப்படிப்பட்ட பேர வைக்கு இந்த வட-கிழக்கு ஆயர் மன்றம் ஒரு சவாலாகவே அமையும் என்பது எனது எதிர்வுகூறு. ஆனால் இது காலத்தின் தேவை. முன்னெடுத்த காலை பின் வாங்காது தொடர்ச்சியாக இந்த வட - கிழக்கு ஆயர் மன்றம் இயங்க வேண்டும். ஒட்டுமொத்த தமிழினத்துக்கும் இப்படிப் பட்ட ஒரு வலிமையான சிவில் தலை மைத்துவம் தேவை.

எங்ஙனம் உள்ளூரில் (தமிழ் இனத்தின்) இந்த அறிக்கைக்கு சில சமயத் துவேஷங்கள் கொண்டோர் சமயப் பூச்சுப் பூச முனைகிறார்களோ, அதேபோன்று நாடளாவிய ரீதியில் சிங்கள தேசம் இந்த அறிக்கையை ஓர் தமிழின அறிக்கையாக, இன்னும் சொல்ல வேண்டுமானால் ஒரு புலியினப் பூச்சுப் பூசினாலும் வியப்படைவதற்கில்லை. காலந்தான் பதில் சொல்லும்.

**கரவையூர் செல்வம்**

## கத்தோலிக்க குருக்கள்

சித்திரை 18ம் நாளில் வெளி வந்த தினக்குரலில் (பக்20) திரு. சி.அ.யோதிலிங்கம், மறைந்த மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை அவர்களைப் பற்றி நீண்ட தொரு கட்டுரை வரைந்திருந்தார். கத்தோலிக்க மக்களே மறந்துவிட்ட சில குருக்கள் பெயர்களையும் இணைத்து இதுவரை தமிழினத்திற்காக உயிர் கொடுத்த குருக்கள் அத்தனை பெயர் களையும் பட்டியல் இட்டுக் காட்டியுள்ளார். அது ஒரு வரலாற்றுப் பதிவு. இக்குருக்கள் தமிழ்க் கத்தோலிக்க மக்களுக்காக மட்டும் உயிர்த் தியாகம் செய்யவில்லை. தமிழின விடுதலைக்காக உயிர் கொடுத்தனர்.

இரண்டொரு உதாரணங்கள். போரின் கடைசிக் காலத்தில் அருட்பணி M.T.சறத்ஜீவன் அடிகள் வன்னியில் இருந்து வெளியே வருவதற்கு வாய்ப்புகள் இருந்தன. ஆனால், எந்த மக்களுடன் பணிசெய்து வாழ்ந்தாரோ அதே மக்களுடன் இறுதி வரை இருந்து உயிரிழந்தார். யாழ் பத்திரிசியார் கல்லூரி முன்னாள் முதல்வர் அருட்பணி G.E.பிரான்சிஸ் யோசப் அடிகள், ஓய்வு பெற்ற பின்னர் வன்னி இளைஞர்களின் கல்வி வளர்ச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்தார்.

போர்க்கால இறுதிக் கட்டத்தில் அவர் விரும்பியிருந்தால் வன்னியில் இருந்து வெளியேறி இருக்கலாம். ஆனால் போராளிகள் பலருடனும் அவருடன் இருந்த பொதுமக்களுடனும் இராணுவத்திடம் சரணடைந்தார். சரணடைந்தவர்கள் எங்கே? இராணுவம் பொறுப்புக்கூற வேண்டும். இந்தக் குருக்கள் அத் தனை பேரும் தமிழ்க் கத்தோலிக் மக்களுக்காக மட்டுமன்றோ அன்றேல் தங்கள் திருமறைக்காகவோ (வேதத்திற்காகவோ) தங்கள் உயிரைத் தியாகம் செய்யவில்லை. திருமறைக்காக (வேதத்திற்காக) உயிர் கொடுத்திருந்தால், கத்தோலிக்க திருஅவை அவர்களை திருமறைச் சாட்சிகளாக (வேத சாட்சிக ளாக) அழைத்திருக்கும். அவர்கள் தமிழினத்திற்காக உயிர் கொடுத்தவர்கள். இது தியாகம்.

யோதிலிங்கம் தனது கட்டுரை யில் எழுதுகிறார். "கிறிஸ்தவ மத நிறு வனங்கள் சற்று வலிமையானவை யாக இருக்கின்ற போதும் நிறுவன ரீதியாக அரசியல் செயற்பாடுகளில் தலையிடுவதில்லை. சில தனிநபர்க ளான மத குருமார்கள் மட்டும் தம் சுய விருப்பில் அரசியல் செயற்பாடுகளில் அக்கறை செலுத்துகின்றனர். மதத் தலைமைப்பீடம் அவர்களது செயற்பாடு களைச் சகித்துக் கொண்டிருக்கிறதே தவிர விரும்பியது கிடையாது". யோதிலிங்கத்தின் கூற்றில் ஓர் உண்மை இல்லாமல் இல்லை. ஆயினும் ஒரு சிற திருத்தம். அவர் குறிப்பிடுவது போல் ஒரு சில தனி நபர்கள் (குருக்கள்) அரசியல் செயற்பாடுகளில் அல்ல, ஆனால் மனித உரிமைப் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர். அடிமைத்தனத்திற்கெதிராக, அடக்கு முறைக்கெதிராக, அநீதிக்கெதிராகக் குரல் கொடுக்கிறார்கள். இந்த அடக்கு முறைகளையும், அடிமைத்தனத்தையும் அநீதியையும் நிலை நாட்டுவது அரசியல் வாதிகளாக இருப்பதனால், இவர்களது போராட்டம் அரசியல் செயற்பாடுபோல் தோன்றுகிறது. ஆனால் அவை அரசி யல் செயற்பாடல்ல. மனிதாபிமான செயற்பாடு "நீதியை நிலை நாட்டும் வேட்கை கொண்டோர் பேறுபெற்றோர், ஏனெனில் அவர் நிறைவு பெறுவர்" (மத் 5:6) "அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர். ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் எனப்படுவர்" (மத் 5:9) இவை இயேசு வின் மலை உரையில் இருந்து எடுக்கப்பட்டவை. நீதிக்குப் பின்னர்தான் அமைதியும் நல்லிணக்கமும்.

மத அடிமைத்தனத்திற்கும், அநீதிக்கும் எதிராக இயேசு வலிமையாகவும் உறுதியாகவும் குரல் கொடுத்தவர். யூத மதமும் யூத சமூகமும் ஒன்றிணைந் திருந்ததால், இயேசு இருவகை அடிமைத்தனத்தில் இருந்தும் மக்கள் விடுதலை பெற வழிகாட்டினார்.

## சிங்களம் - பௌத்தம்

இன்று இந்த நாட்டில் சிங்களமும், பௌத்தமும் இணைக்கப்பட்டுள்ளன. உலகளாவிய என்ற ஒரு பௌத்த நெறியைச் சிங்களம் என்ற ஒரு மிகச் சிறிய வட்டத்தினுள் அடக்கிவிட்டமை பௌத்தத் திற்கு ஏற்பட்ட ஓர் இழிவு. சிறிய வட்டம் உடையும். பெரிய வட்டம் வாழும், வளரும், படரும்.

சிங்களத்தையும் பௌத்தத் தையும் ஒன்றிணைத்த காரணத்தி னாலோ என்னவோ பௌத்தத்தின் சாயலில் பௌத்தத்தின் .

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

# காவலன் கலசம்

காவலன் கலசம் காவலன் கலசம் காவலன் கலசம் காவலன் கலசம் காவலன் கலசம் காவலன் கலசம்



# நினைவேந்தல்கள்

## இறந்தவர்களின் நினைவை சிறப்பித்துப் பெருமை பாராட்டுகின்றன

அருட்பணி ஜீவா பேரல் அ.ம.தி

**மே** மாதம் 18ஆம் திகதி முள்ளிவாய்க்கால் படுகொலையினால் மரணித்தவர்களை நினைவு கூரும் நோக்குடன் வட கிழக்கு ஆயர் மன்றம் இந்நாளில் மணியோசை எழுப்பி ஈகைச்சுடர் ஏற்றி அகவணக்கம் செய்து மன்றாட அழைத்திருப்பது தமிழ் பாரம்பரியத்துடன் கூடிய ஒரு கிறிஸ்தவ கடமையாகும்.

**நினைவேந்தல்கள் உரிமையோடு கூடிய கடமையாகும்**

செப்ரெம்பர்-11 உலக வர்த்தக நிலையத்தில் விமானத் தாக்குதலால் இறந்தவர்களை நாடளாவிய ரீதியில் நினைவு கூருவர்.

2004 டிசெம்பரில் சுனாமியால் உயிர் நீத்தவர்களை எம் நாட்டிலும் ஏனைய நாடுகளிலும் நினைவு கூராமல் இருக்க முடியாது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலை இலங்கை வாழ் கத்தோலிக்கர் யாவரும் உணர்வு ரீதியாக நினைவு கூரும்படி கொழும்பு பேராயர் கருதினல் மல்கம் றஞ்சித் ஆண்டகை அழைப்பு விடுத்தார்.

யுத்த காலத்தில் ஆலயங்களிலும் பாடசாலைகளிலும் அகதி முகாம்களிலும் உயிர் நீத்த அப்பாவிப் பொது மக்களை அந்தந்த இடங்களில் ஆண்டு தோறும் நினைவு கூர்ந்து வழிபாடுகள் சடங்குகள் இரங்கல் உரைகள் என்பன நடத்துவது இழப்பைச் சந்தித்த மக்களுக்கு உளரீதியான ஓர் ஆற்றுப்படுத்தலாக அமை-கிறது.

**நினைவேந்தல் அடையாளங்கள் இறந்தோரின் நினைவுகளே**

இது ஒரு ஆன்மீக முயற்சி என்று கூறினும் பொருத்தமானது. பல சமயங்களிலும் கலாசாரங்களிலும் இறந்தோரை நினைவு கூரும் பழக்கம் தொன்று தொட்டு நடைமுறையில் இருந்து உள்ளது. அவ்வாறு நினைவு கூருதல் பின்வருமாறு வெளிப்படுத்தப்படுகிறது. மெழுகுவர்த்தி அல்லது சுடர் ஏற்றுதல் ஆலயங்களில் மணியோசை எழுப்புதல் நினைவுத்தூபிகள் கட்டிடங்கள் அமைத்தல் வீதிகளுக்குப் பெயர் சூட்டுதல் நிறுவனங்கள் அறக்கட்டளைகளை ஏற்படுத்தி மனித நேயப்பணிகளைச் செய்தல் போன்ற அடையாளச் செயல்களே அவையாம். இவற்றின் வழி இறந்தோரின் நினைவுகள் என்றும் இறப்பதில்லை.

இயேசுவும் தம் நினைவாகச் செய்யுங்கள் என்று அப்பம் பிட்குதலில் தமது தியாக மரணத்தை நினைவு கூரத் தம் சீடர்களுக்குக் கட்டளை இட்டார். அவருடைய உயிர்ப்பின் தரிசனங்களின் போது தமது சீடர்களுக்கு அவர் முன்னைய நாட்களில் கூறியதை நினைவுபடுத்தித் தமது இறப்பின் பொருளையும் நோக்கத்தையும் அவர்கள் கண்டுணரச் செய்தார்.

எம்மாவூ என்ற ஊர் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த இரு சீடர்கள் இயேசுவின் மரணத்தைப் பேரிழப்பாகவும் பெருந்துயராகவும் கருதி முகவாட்டத்தோடு நின்றார்கள். இயேசுவோ அவர்களோடு வழி நடந்து இறை நூலை விளக்கி அவர்களோடு பந்தியில் அமர்ந்து அப்பத்தைப் பிட்டுக் கொடுத்த போது சீடர்களின் கண்கள் திறந்தன. அவர்கள் நினைவுகள் மீட்கப்பட்டன.
அவர்கள் வாழ்வு விடியலைக் கண்டது. நம்பிக்கை கொண்டவர்களாக இறப்பின் துயரத்தை மறந்து புதிய வாழ்விற்கு அடியெடுத்து வைத்தார்கள். எனவே இறப்புக்கள் குறிப்பாக மனிதப் படுகொலைகள் தனி மனிதர்களை மட்டுமல்ல ஒரு சமூகத்தையே மத ரீதியாகவோ மொழி ரீதியாகவே இன ரீதியாகவோ பெரிதும் பாதிக்கிறது. அவர்களது ஆன்மா நொந்து போகிறது.

**நினைவேந்தல்கள் குணமாக்கும் இயல்பு கொண்டவை**

மனநல மருத்துவர் டாக்டர் தயா சோமசுந்தரம் அவர்கள் 30 ஆண்டு கால கொடிய யுத்தம் தமிழ் சமூகத்திற்கு ஒரு ஒன்றுபட்ட வேதனைக் கோளாற்றை ஏற்படுத்தியுள்ளதெனக் கூறுகிறார். துயருறும் நினைவேந்தல் நிகழ்வுகள் ஒரு சமூகத்தினுடைய துயரத்தை ஆற்றுப்படுத்தும் மருந்தாகவும் அல்லது சிகிச்சை முறையாகவும் கருதப்படலாம். அதனால் சமயச் சடங்குகளும் நினைவேந்தல் நிகழ்வுகளும் குணமாக்கும் இயல்பு கொண்டவை. இறந்தோரை நினைவு கூருவதால் வாழ்வோரின் உள்ளங்களில் நன்றி உணர்வோடு கூடிய ஆற்றுப்படுத்தலும் இடம் பெறுகிறது.

இறைமக்களினது செபங்களில் சிறப்பாக திருப்பலியில் இறந்தோரை நினைவு கூருவது தொன்று தொட்டு இருந்து வருகிறது. சமயம் வேறு மனித ஏக்கங்கள் வேறு அல்ல. இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகளில் புதுமையான ஓர் ஏடு 'இன்றைய உலகில் திருஅவை' என்னும் ஏடாகும். அதில் ***"மனிதரின் மகிழ்வும் எதிர்நோக்கும் ஏக்கமும் கவலையும் கிறிஸ்தவர்க்கும் முற்றிலும் உரியனவே"*** என்று தெளிவாக எடுத்தரைக்கப்பட்டுள்ளது.

மனித ஆற்றலால் மட்டும் மனித அவலங்களையும் காயங்களையும் குணமாக்க முடியாது. பல பரம்பரைக்கும் கடத்தப்படும் இக்காயங்களில் இருந்து விடுபட நினைவு நிகழ்வுகள் உணர்வு ரீதியாக இடம் பெறவேண்டும். இழப்புக்களைச் சந்தித்த மக்களின் மனங்களில் ஏற்பட்ட காயம், வலி, வேதனை, நிந்தனை போன்ற உணர்வுகளை ஆற்றுப்படுத்த இறைவனிடமே வேண்டுதல் செய்து அவை யாவும் இறைவனின் சந்நிதானத்தில் கண்ணீராகக் கரைக்கப்பட வேண்டும்.

**இறந்தவர்களை சிறப்பிப்பதும் நினைவேந்தலே**

கடவுள் மோசேயிடம் கூறினார் "என் மக்கள் படும் துன்பத்தை என் கண்களால் கண்டேன். இவர்கள் எழுப்பும் குரலையும் கேட்டேன்". நினைவேந்தல் நிகழ்வுகள் வெறும் அரசியல் நாடகமாகக் கருதப்படாமல் அடி மனங்களில் இருந்து இறைவனை நோக்கி எழுப்பப்படும் கண்ணீரோடு கூடிய வேண்டுதல்களாக அமையச் செய்வோம். இது ஒரு மத உரிமையும் கடமையும் கூட.

மாக்சிமில்லின் கோல்பே போலாந்து நாட்டைச் சாந்த ஒரு பிரான்சீஸ்கன் சபைத் துறவி ஆவார். மரியாள் வழி இயேசுவிடம் என்ற விருது வாக்கைக் கொண்டு அசுவிச் நாசி வதைமுகாமில் ஆன்மீகப் பணியாற்றிய இவர் 14 ஆகஸ்ற் 1941இல் அறிமுகம் இல்லாத சிறைஞர் ஒருவருக்காகத் தன் உயிரைக் கொடுத்தவர். இவரை 1982இல் புனிதர் நிலைக்கு உயர்த்திய திருத்தந்தை புனித 2ஆம் யோவான் பவுல் இவரைப் பிறரன்பின் மறைசாட்சி எனப் பிரகடனப்படுத்தினார்.

இச்செயலால் மறைக்காக மட்டுமல்ல அன்பு தியாகம் போன்ற கிறிஸ்தவ விழுமியங்களுக்காகவும் உயிர் நீத்தவர்களைப் பீட மரியாதைக்கு உயர்த்தினார். இவ்வாறு அவர்கள் நினைவை நிரந்தரமாக்கி எதிர்காலச் சந்ததியினருக்கு முன்னுதாரணமாகவும் படிப்பினையாகவும் திருத்தந்தை வழங்கினார். எனவே நினைவேந்தல் காயங்களைக் குணமாக்குவது மட்டுமல்ல இறந்தவர்களின் நினைவை சிறப்பித்துப் பெருமையாகப் பாராட்டுகிறது. ●

# இன்று முழு உலகத்திற்குமே ஒட்சிசன் தேவை



ஸ்ரனி அன்ரனி அ.ம.தி

**இ**ன்றைய உலகை அச்சுறுத்தி ஆட்டிப்படைத்துக் கொண்டிருப்பது கொ-ரோனா வைரஸ் என்று சொன்னால் மிகையாகாது. 'கொரோனா' என்ற சொல்லைக் கேட்டாலே அச்சமும், அங்கலாய்ப்பும், ஏக்க மும் ஏற்படுகின்றது. 'வலியவர் வாழ்வர்' (Survival of the fittest) என்ற நிலையே இக்காலகட்டத்தில் ஏற்பட்டுள்ளது. உலகத்தை எத்தனை நோய்கள் கடந்த நூற்றாண்டுகளில் உயிர்களைக் காவுகொண்டிருந்தாலும், இந்த உயிர் கொல்லி வைரஸ் போல் ஒரு உயிரியல் போரையே (Bio war) மனித குலத்தின் மீது தொடுத்துள்ளது என்று கூறலாம். இது முக்கியமாக மனிதர்களின் சுவாசத்தைப் பாதிக்கும் நோயாகவே மாறிவிட்டது. இன்று ஒட்சிசன் சிலிண்டர்கள் இல்லாமல் எமது அயல்நாட்டில் உயிர்கள் காவுகொள்ளப் பட்டு, அவலமாக எரிக்கப்படும் காட்சிகள் கொடூரமானவை.

## ஏன் இந்த அவலங்கள்?

இன்று ஏற்பட்டுள்ள அவலங்களுக்கும், உயிரிழப்புக்களுக்கும் உடன-டிக் காரணமாக அமைவது கொரோனா வைரஸ் என்று சொல்லிவிடலாம், ஆனால் எத்தனையோ பின்புலக் காரணிகள் (re-mote) இத்தகைய அவலங்களுக்குக் காரணமாகவும் அமைந்து விடலாம். இந்த உயிர்க்கொல்லி நோயிலிருந்து பாது காப்பதற்கான தடுப்பூசியும், சுகாதார கட்டுப்பாடுகளும் ஓரளவு இதனைக் கட்டுப் படுத்தலாம். உயிர்க்கொல்லி நோயைத் தாண்டி மனித குலம் இன்றைய சமகாலச் சூழலில் தன் வேர்களை இருப்புக் களை மீளாய்வு செய்ய வேண்டிய கட்டாயத்திற்கும் தள்ளப்பட்டுள்ளது. சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையலாம் என்பது உண்மை தான் முதலில் ஒரு ஆரோக்கியமான வாழ்வு முக்கியமானது என்பதை மறுக்க முடியாது. எனினும் மனிதனின் உயிர்மூச்சாக இருக்க வேண்டிய மனிதப்பண்புகளையிட்டும் கருத்திற் கொள்வதும் முதன்மையானது. மனித வாழ்விற்கு ஒட்சிசனாக இருப்பது அன்பு இரக்கம், மனித நேயம் என்று சமூக தொடர்பாடல் சாதனங்கள் வலியுறுத்தினாலும் மனித வாழ்வை வளப் படுத்தும், அன்பை, உறவுகளை, மனிதப் பண்புகளை தொலைத்து வாழ்ந்தோம். இவைகள் தான் உண்மையில் மனித இருப்பிற்கு அர்த்தம் கொடுக்கும் ஒட்சிசன் (oxygen) என்பதை கடந்த காலங்களில் முழு உலகமே மறந்து வாழ்ந்தது என்பதை மறுக்க முடியாது. அறிவும் பொருளாதாரமே வாழ்வாதாரம் என்ற சிறிய வட்டத்தினுள் வாழ்ந்ததின் விளைவைத் தான் இன்று அநுபவித்து கொண்டிருக்கின்றோம். முழுமையாக வாழ் வின் ஆதாரமான "ஒட்சிசன் (oxygen)" இழந்து விட்டோம் என்பது அர்த்தம அல்ல, மாறாக தொலைத்து விட்டு வாழ்ந்தோம் என்பதே உண்மையாகும். இன்று கொ-ரோனா ஏற்படுத்திய தாக்கங்களினால், பாதிப்புக்களினால் மூச்சு விட முடியாமல் திணறுகின்றோம். இன்றும் கொரோ-னா கற்றுத்தந்த வாழ்க்கைப் பாடங்களை புரிந்து கொள்ளாமல் பாராமுக கலாசாரத் தில் (indifference) நிலைத்து வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இக்கொரோனா எமது வாழ்வின் ஊற்றுக்கண்களை இறக்க வேண்டும். இன்னும் அன்பு, இரக்கம், மனிதநேயம் எல்லாம் பேச்சளவில் தான் இருக்கின்றது என்பதே கசப்பான உண் மையாகும். உயிரையும், வாழ்வையும் காப்பாற்றப் போராட வேண்டிய கால கட்டத்திற்குள் தள்ளப்பட்டுள்ளோம்.

## நாம் மீட்டெழுவது தவிர்க்க முடியாதது!

நாம் கடந்து வந்த 30 வருட காலப் போரினால் மீண்டெழுந்த நாங்கள், இந்த உயிரியல் போரின் மத்தியிலும் மீண்டெழுவது தவிர்க்க முடியாதது. மீண்டெழுதல் என்பது வெறுமனே அழிந்து போன கட்டிடங்களை உட்கட்டமைப்பு வசதிகளை மட்டும் ஏற்படுத்தி வாழ்வது என்ற வரையறைக்குள் உட் படுத்த முடியாது. இது நெருக்கீடுகளுக்கு மத்தியிலும் வாழக்கூடிய ஒரு மனநிலையை, ஒரு மனப்பக்குவத்தி கட்டியெழுப்பி வாழ்வதாகும். சாவை விட வாழ்வு வலியது என்பதை மனத்தில் இருத்தி வாழும் வரைக்கும் ஒரு அர்த்தமுள்ள வாழ்க்கையை வாழ்வ தாகும். இன்று சாவைப் பற்றிய அச்சங் கள், குழப்பங்கள் மனதை நிறைப் பதால், நிகழ்காலத்தில் (Living in Present) சில நன்மைகளை, நற்செயல்களை, கடமைகளை, (தொடர்ச்சி 9ம் பக்)

# எங்களையும் திருஅவையையும் வழிநடத்திக் கொண்டிருப்பவர் தூய ஆவியானவரே

**தூ**ய ஆவியானவர் யார் என்று கேட்டால் அவர் கடவுள், ஏனென்றால் மூவொரு கடவுளின் மூன்றாம் நபர். அவர் உருவமற்றவர் ஆனால் எல்லாவற்றையும் செயற்படுத்துபவர். அவரைக் காண முடியாது, ஆனால் அவரது செயல்களை நாம் உணர முடியும். இவரே இன்று எங்களையும் திருஅவையையும் வழிநடத்திகொண்டிருப்பவர். தூய ஆவி யானவரே இன்று எங்களையும் திருஅவையையும் வழிநடத்திகொண்டிருப்பவர்என்று சொல்லும்போது, ஏன் ஆண்டவர் இயேசு இன்று எம்மை வழிநடத்தவில்லையா? நாம் இயேசுவிலேதானே நம்பிக்கை கொள்கிறோம் என்று கேள்விகளைக் கேட்க முடியும், வாதாடவும் முடியும். அந்த வகையில் நம் கத்தோலிக்க இறைநம்பிக்கை "கடவுள்" பற்றி என்ன கூறுகின்றது என நாம் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும். நாம் பல கடவுளை நம்பும் மக்கள் அல்ல மாறாக ஒரே கடவுள் நம்பிக்கையுடையவர்கள். ஒரே கடவுளை நம்புகிறோம், அவரையே அறிக்கையிடுகிறோம்.

"நானே இறைவன் என்னையன்றி வேறு எவருமில்லை". (எசா 45:22). இந்த இறைவார்த்தையூடாக எமது ஒரே கடவுள் நம்பிக்கை தெளிவாக புலப்படுகிறது. ஒரே கடவுளை நம்புகின்றோம் என்றால் ஏன் தந்தையாகிய இறைவன், மகனாகிய இயேசுக்கிறிஸ்து, தூய ஆவி என்று பிரித்து ஒரு குழப்பமான நிலைமை என்று வினவ முடியும். நானும் நீங்களும் நம்பும் கடவுள் "வலிமையும் ஆற்றலும் கொண்டவர் (திபா 24:8), "அவரால் இயலாதது ஒன்றுமில்லை" (லூக் 1:37). அவர் விண்ணகத்தையும் மண்ணகத்தையும் படைத்த எல்லாம் வல்ல இறைவன். "கடவுள் மட்டுமே தம்மில் முழுமையையும் எல்லா நிறைவையும் கொண்டிருப்பவர்" எனக் கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி ஏடு (இல-212) கூறுகிறது. இவ்வாறு தன்னிலே வல்லமையுள்ள, நிறைவுள்ள கடவுள் தனது தெய்வீக வாழ்வில் மனிதர்களாகிய நாமும் பங்குபெற விரும்பினார். ஆனால் மனிதன் தனது பேராசை யினால் கடவுளின் உறவை உதறித்தள்ளித் தனது இயல்பைக் காயப் படுத்திகொண்டான்.

ஆனால் நாம் நம்பும் இறைவன் தனிமையில் குடிகொண்டிருப்பவர் அல்ல மாறாக மற்றவர்களுடன் ஒன்றித்து வாழும் கடவுள் ஏனெனில் அவர் அன்பையே தன் இயல்பாகக் கொண்டவர். (1யோவா 4:8). அவர் தன்னை முழுமையாக வெளிப்படுத்தினார். காயப்பட்ட இயல்போடு மனிதன் தன்னோடு உறவு கொள்ள முடியாதென்பதால் அவர்தாமே எமது காயப்பட்ட இயல்பை ஏற்றுத் தனது சிலுவைச்சாவின் மூலம் மீண்டும் எம்மை இறைவனோடு சேர்த்து அவரது தெய்வீக வாழ்வில் நாம் பங்குகொள்ள வழிசெய்தார். "இது எனது உடன்படிக்கையின் இரத்தம் பலருடைய பாவ மன்னிப்புக்காகச் சிந்தப்படும் இரத்தம்" (மத் 26:28) அவரையே நாம் இயேசு கிறிஸ்து என அறிக்கையிடுகிறோம். இவர் ஊடாகத்தான் நாம் இறைவனிடம் செல்ல முடியும். "வழியும் உண்மையும் வாழ்வும் நானே. என் வழியாய் அன்றி எவரும் தந்தையிடம் வருவதில்லை" (யோவா 14:6). ஆண்டவராகிய இயேசுவில் நாம் நம்பிக்கை கொள்ளும் போது நாம் தந்தையாகிய இறைவனில் நம்பிக்கை கொள்கிறோம். "நான் தந்தையுள் இருக்கிறேன்: தந்தை என்னுள் இருக்கிறார். (யோவா14:11). ஆண்டவர் இயேசு தனது சிலுவைச் சாவினூடாக எமது பாவங்களையும் சிலுவை யில் அறைந்து எம்மை இறைவனோடு ஒன்றித்த பின்பு விண்ணகம் சென்றார். அவர் தந்தையின் வலப்பக்கம் அமர்ந்திருக்கிறார் என்பது நமது நம்பிக்கை.



அப்படியென்றால் இன்று எம்மோடு இருப்பவர் யார்? எம்மை வழிநடத்துபவர் யார்? என்று கேட்டால் அது எம் தந்தையாகிய இறை வனின் ஆவியே. இவரையே நாம் தூய ஆவி என்று அழைக்கிறோம். "உங்களோடு என்றும் இருக்கும்படி மற்றொரு துணையாளரை உங்களுக்கு தருமாறு நான் தந்தையிடம் கேட்பேன்.

**அருட்பணி அ. சியான்ஸ்ரன் ஜெனிஸ் அ.ம.தி**

தந்தை அவரை உங்களுக்கு அருள்வார். (யோவா 14:16). தூய ஆவியானவர் எங்களோடு பயணிக்கிறார், எங்களோடு வாழ்கிறார். ஏனெனில், அவர் உங்களோடு தங்கியிருக்கிறார்: உங்களுக்குள்ளும் இருக்கிறார். (யோவா 14:17). ஒரு சிறிய சம்பவத்தினூடாக சில உண்மைகளை விளக்க விளைகின்றேன். "முதுகு வலியினால் மிகுந்த வேதனையில் குளறிக்கொண்டிருந்த ராசனுக்கு, அவனுடைய அம்மா வலிபோக்கும் எண்ணெய்யை அவன் முதுகில் தேய்து விட சிறிது நேரத்திற்கு பின் ராசன் தனது வழமையான காரியங்களைச் சுறுசுறுப்புடன் செய்ய தொடங்கினான்".

(தொடர்ச்சி 11ம் பக்.)

## வட-கிழக்கு ....

(6ம் பக்கத் தொடர்ச்சி)

பின்னால் ஒழிந்து கொண்டு தமிழினத்தின் நிலப்பரப்பை அபகரிக்கின்றது. சிங்கள தேசம். இன அழிப்புக்கு இது இன்னொரு வடிவம். சிங்கள ஆயரவைக்கு இதை இடித்துரைக்க வட- கிழக்கு ஆயர் மன்றம் முன்வரவேண்டும்.

### மாயையில் வாழ்வோம்

சிங்களமும் பௌத்தமும் ஒன்றானால் சிங்களக் கத்தோலிக்கத்தின் எதிர்காலமென்ன? சிங்களக் கத்தோலிக்கம் இந்நாட்டில் ஒரு சிறுபான்மை என்ற கசப்பான உண்மையை சிங்களக் கத்தோலிக்கம் என்று உணருமோ அன்று தான் அவர்களின் விடுதலையின் ஆரம்பம். அன்று தான் கிறிஸ்தவம் வாழத் தொடங்கும். இன்று, சிங்களக் கத்தோலிக்கம் (முரண்பட்ட சொற்றொடர் முரண்பட்ட வாழ்க்கை) ஒரு மாயை யில் வாழுகின்றது. யதார்த்தத்தைவிட மாயையை வாழ்வது இலகுவானது. Illusions are more livable than reality இக் கூற்று மாயையில் வாழும் அனைத்து மக்களுக்கும் பொருந்தும். இந்த மாயையில் வாழ்ந்த சிங்களக் கத்தோலிக்கத்தை யதார்த்தத்திற்கு அழைத்தது உயிர்த்த ஞாயிறு கத்தோலிக்க ஆலய குண்டு வெடிப்பு. மாயையில் வாழ்ந்தோருக்கு ஓர் அதிர்ச்சி மருத்துவம் தேவைப்பட்டது போலும்.

உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்பின் பின்னணியில் இருப்போரை இனங்கண்டு சட்டத்திற்கு முன் கொண்டுவர வேண்டுமென்று பல ஊடக சந்திப்புக்களில் கூறி வந்தார் கர்தினால் மல்கம் ரஞ்சித் அவர்கள். இத்திங்கள் 21ம் நாளுக்கு முன்னர் இது நடைபெற வேண்டுமென்று ஒரு காலக்கெடு கொடுத்தாரே! இன்று அவர் மௌனித்ததன் மர்மமென்ன? இனியாவது மாயையில் இருந்து யதார்த்ததிற்கு வருமா சிங்களக் கத்தோலிக்கம்?

ஈழத்து கத்தோலிக்க பேரவை பெரும்பாலும் ஒரு சிங்கள ஆயர் பேரவையாகவே செயற்பட்டு வந்தது வெள்ளிடைமலை. அதனால்தான் என்னவோ இந்தப் பேரவை நீதிக்குக் குரல் கொடுக்க பலதடவைகள் தவறிவிட்டது. கிறிஸ்துவிற்கு சாட்சியம் பகிரப் பின்வாங்கியது.

நான் ஏற்கனவே கூறியதுபோல சில சிங்கள மறைமாவட்டங்களில் தமிழ்க் கத்தோலிக்கர் செறிப்பாக வாழ்ந்தாலும், அவர்கள் தங்கள் தாய்மொழியில் வழிபடும் உரிமை மறுக்கப்பட்டது. மறுக்கப்படுகின்றது. மாயையில் வாழ்ந்து வருவதினால் ஏற்பட்ட விழைவுகளில் இதுவும் ஒன்று.

இந்தப் பின்புலத்தில்தான் நான் வட-கிழக்கு ஆயர் மன்றத்தின் அவசியத்தை உணருகின்றேன். இது, அரசியல் அல்ல. இது காலத்தின் தேவை. ஈழத்து ஆயர் பேரவைக்குப் போட்டியாகவோ, அன்றேல் புறம்பான தாகவே இந்த மன்றத்தைப் பார்ப்பது தவறு. ஆயர் பேரவைக்குள் இப்படி ஒரு மன்றம் இருக்குமானால், தமிழ் மக்களின், தமிழ்க் கத்தோலிக்க மக்களின் இன்றைய யதார்த்தமான நிலையை எடுத்துரைக்க முடியும். அப்பொழுதுதான் ஆயர் பேரவையின் பார்வை கிறிஸ்தவ பார்வையாக விரி யும், அகலும், ஆரோக்கியமாக வாழும்.

## தமிழ்க் கிறிஸ்தவத்தின் இறை அனுபவ வளர்ச்சி

**நான் குருவாகி ஓர் இறை யியலாளராக உருவெடுத்த தன் பின்பு, பெரும் பாலும் ஆசிய நாடுகளின் அடிப்படையிலும், எங்களது சொந்தத் தமிழ் சூழலிலும், எனது இறையியல் சிந்தனைகளை உருவாக்கி யிருக்கின்றேன். அவற்றை இங்கே தருகின்றேன்.**

*- அருட்பணி எஸ்.ஜே.இம்மானுவேல்*



### 1.8 2 ஆம் வத்திக்கான் சங்கத்தின் துணிச்சலும் ஆர்வமும் நீடிக்கவில்லை! இருந்தும் தொடர்ந்தன சீர்திருத்த முயற்சிகள்

சங்கத்தின் பார்வையையும் ஊக்குவித்தல்களையும் நடைமுறைப்படுத்துவது வத்திக்கானில் தங்கியிருந்த தலைவர்களிலே தங்கியிருந்தது. இதன் காரணமாகப் பல இழுத்தடிப்புகள். தமிழ்த் திருஅவைகள் தமது தமிழ் - மார்க்க வாழ்க்கை முறைகளின் காரணமாக எல்லாவற்றையும் முழுமையாக உள்வாங்கவில்லை.

தமிழ் மொழி கலை கலாசாரம் சார்ந்த முன்னேற்றங்களைப் பெருமையுடனும் ஆர்வத்துடனும் வரவேற்று அரும்பெரும் முயற்சிகளில் தமிழர் தம்மை ஈடுபடுத்துகின்றனர். ஆனால் அதே சங்கம் மனித சமூகத்தின் மேன்மைக்காக வலியுறுத்திய வழிகளை வரவேற்கத் தயங்குகின்றனர். மனித சமூக வாழ்வின் பிரச்சினை களுக்கு வறுமை, - ஏற்றத்தாழ்வு - அடக்கு முறைகள் - அநீதி இவைகளுக்குக் காரணமாயி ருப்பவற்றை ஒழிக்கத் தயங்குகின்றனர். காரணத்தைத் தேடுவோம்.

சங்க முடிவுகளைத் தன்னும் எமது ஆசியச் சூழலில் நடை முறைப்படுத்துவதில் வத்திக்கான் அதிகாரிகளை மனம் திருப்புவது கடினமாயிருந்தது. (1986-1994 வரை ஆசியத் திரு அவை ஆயர்களுடன் நானும் ஏனைய 15 ஆசிய இறையியலாளரும் உரோமை இறையியல் அதிகாரிகளுடன் கலந்துரையாடல்கள் நடாத்திய போதும் எமது மத - பண்பாட்டு பிரச்சினைகளை ஏற்று முயற்சி எடுப்பது கடினமாயிற்று) ஆனால் தற்போதைய பாப்பரசர் பிரான்சிஸ் எமக்கு நம்பிக்கை ஊட்டுகின்றார். ஆகையி னால் இனியாவது, இந்த 2 ஆம் வத்திக்கான் சங்கம் ஊடாக பரிசுத்த ஆவியானவர் ஏவியிருக்கும் சீர்திருத்த வழிகளை அலட்சியம் செய்யாது மனப்பூர்வமாகவும் ஆர்வத்துடனும் ஏற்று எம்மைச் சீர்திருத்துவோமாக.

### 1.9 ஐந்து நிலைகளில் புதுப்பிக்க முயலுவோம்.

ஆகையால் மேற்குறிப்பிட்ட காரணங்களுக்காக எமது சீர்திருத்தல் முயற்சி - கிறிஸ்தவத்தின் தனிப்பெரும் தன்மைக்கும் எமது தமிழ் உண்மைச் சூழலுக்கும் சவால்களுக்கும் ஏற்றதாக நேர்மையானதாக இருக்க வேண்டுமாயின் நாம் ஐந்து நிலைகளிலே வழி செல்ல வேண்டி இருக்கிறது.

1. கிறிஸ்தவ மதம் யூத ஊற்றைக் கொண்டிருந்தாலும் ஆரம் பத்திலேயே திரு அவை முழு மனிதருக்குமாக, இன - பண்பாட்டு எல்லைகளைக் கடந்ததாக வெளிப் படுத்தப் பட்டது. (Universality of Christianity) இவைகள் விவிலியத்தில் தெளிவாகக் கூறப்பட்டிருக்கின்றன.
2. திருஅவை பல நூற்றாண்டுகளாக ஐரோப்பாவில் வளர்ந்த தன் காரணமாக ஐரோப்பிய தோற்றத்தையும் சிந்தனை - இறையியல் - வழிபாட்டு முறைகளை யும் தழுவிற்று. (Roman institutinalisation of Christianity) உரோமையிலே நடைபெற்ற மாற்றங்கள் மேற்கூறப் பட்ட விவிலிய வெளிப்பாட்டினதும் இயேசுக் கிறிஸ்துவின் நற்செய்தி சீடர்களின் நம்பிக்கை குழுக்களின் முக்கியத்துவத்தையும் உரிமையையும் குறைக்க முடியாது.
3. தமிழர்கள் கிறிஸ்தவ மதத்தை ஆரம்பத்தில் தழுவிய விதத்தையும் தமிழ்க் கிறிஸ்தவர்கள் வளர்ந்து வந்த விதத்தை யும் கவனத்திற்கொண்டு திரு அவையின் ஆரம்ப நிகழ்வுக ளையும் 2ஆம் வததிக்கான் சங்கம் கொடுத்த முன்னேற்ற மான பார்வைகளையும் கண்ணோட்டத்தையும் முழுமை யாக உள்வாங்கி ஆரம்ப தமிழ்க் கிறிஸ்தவர்களில் இருந்த குறைபாடுகளைத் திருத்தி அமைக்க வேண்டும்.

(Updating Tamil Christianity to Vat.II Council)

4. அத்தோடு சங்கம் எமது அந்நிய இன மதப் பண்பாடுகளைப் பற்றி முன்னேற்றமான பார்வையுடன் உறவு கொண்டு கிறிஸ்துவின் ஒளியாகவும் உப்பாகவும் சூழலில் இருக்கும் மனிதத் தன்மையற்றவைகளை நீக்கி நாம் பணி புரிய எம்மை ஊக்கப்படுத்துவதைப் பொறுப்புடன் நாங்கள் உள்வாங்க வேண்டும்.

(Enabling Tamil Christianity to be effective Light - salt in the Tamil world)

(தொடரும்..)

### யாழ். மறைமாவட்டத்திலே சிறிய கிறிஸ்தவ குழுமவாழ்வு

(சென்ற இதழ் தொடர்ச்சி)

பிரதானமாக இப்பங்குகளிலிருந்தும் ஏனைய சில பங்கு களிலிருந்தும் ஊக்குவிப்பாளர்கள் தெரிவு செய்யப்பட்டு வளவாளர் பயிற்சிக்காக ஆயத்தப்படுத்தப்பட்டனர். 1995க்கு பின்னான வருடங்களில் மேலதிக பயிற்சிக ளைப் பெற்று ஆசியாவுக்கான வளவாளர் குழுவிலும் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்த கிளரீசியன் சபையைச் சேர்ந்த அருட்பணி. றோகான் டொமினிக் அடிகள் ஒரு வாரகால வதிவிடப்பயிற்சியாக வளவாளர் பயிற்சியை நடாத்தினார். இவ்வாறு நாற்பது பேரைக் கொண்ட வளவாளர் குழு ஒன்று உருவாக்கப்பட்டது.

இக்குழு புதிய உற்சாகத்தோடு குழுமங்களைப் அருட்பணி. ம.வி.இ. இரவிச்சந்திரன் ஏற்றுக் கொண்டார். அவரைத் தொடர்ந்து அருள்பணி லியோ ஆம்ஸ்ரோங் அடிகளாரும் தற்போது கிளரேசியன் சபையைச் சேர்ந்த அருட்பணி மில்பர் வாஸ் அடிக-ளாரும் இயக்குனர்களாக பணியாற்றி அன்பிய வாழ்வை வழி நடத்தி வருகின்றனர்.

இக்கால கட்டத்தில் ஒரு பொதுப்போக்கை அவதானிக்க முடிந்தது. ஒரு சில குருக்கள் தாம் பணியாற்றும் பங்குகளில் குழுமவாழ்வு இயக்கத்தை ஆரம்பிக்கிறார்கள். இவை அவருடைய பணிக் காலத்தில் சிறப்பாக இயங்குகின்றன. பின்பு அவர்கள் இடமாற்றம் பெற்றுச் செல்கின்ற போது வருகின்ற புதிய பங்குப் பணியாளர்கள் அக்கறை காட்டாதவிடத்து அவை வீழ்ச்சிப் போக்கை காட்டுகின்றன. அதேவேளை அவர்கள் புதிதாகச் செல்லும் பங்கிலே ஆர்வமுள்ள

# இலங்கையிலும் குறிப்பாக யாழ்ப்பாண மறை மாவட்டத்திலும் அன்பியங்களின் தோற்றமும் வளர்ச்சியும்

## ஒரு வரலாற்று நோக்கு



புதுப்பிக்கும் முயற்சியிலும் புதிய அன்பியப் பங்குகளில் ஆரம்பிக்கும் முயற்சியிலும் ஈடுபட்டது. வார இறுதி நாட் களில் பங்குகளில் சென்று தங்கியிருந்து வீடுகளைச் சந்தித்து குழுமவாழ்வை அறிமுகப்படுத்தி பயிற்சிகளை வழங்கிப் பல பங்குகளி லும் குழுமங்களை ஊக்குவித்தனர். குறிப்பாக நாவாந் துறைப் பங்கின் பங்களிப்பு முக்கியமானது. தமது பங்கில் அவர்கள் நடாத்திய குழுமவாழ்வுக் கண்காட்சி யொன்றை இவ்வாறு பங்குகளுக்குச் செல்லும் போது விழிப்புணர்வுக்காக அவர்கள் எடுத்து வந்தனர். மேலும் நாவாந்துறையில் இயங்கும் ஒரு குழுமம் தன்னுடைய முயற்சியாக சிறிய கிறிஸ்தவ குழுமங்கள் பற்றிய வில்லுப்பாட்டு ஒன்றைத் தயாரித்து ஒரு இறுவட்டை வெளியிட்டது. மேலும் குழுமவாழ்வை ஊக்குவிக்கும் பாடல்கள் அடங்கிய இறுவட்டு ஒன்றும் ஆத்மராகம் குழுவினரின் வெளியீடாக வந்திருந்தது. இவையும் மறைமாவட்டக் குழுவினரால் உருவாக்கப்பட்ட துண்டுபிரசுரங்களும் பங்குகளில் வார இறுதியில் நடாத் தப்படும் குழுமவாழ்வு விழிப்புணர்வுச் செயற்பாடுகளுக்குப் பெரும் துணையாக அமைந்தன. இளவாலை மறைக் கோட்டத்தில் சிறிய கிறிஸ்தவ குழுமங்களுக்குப் பொறுப் பாக இருந்த அருட்பணி. அன்ரனிபாலா அடிகளாரும் ஆர்வத்தோடு பங்குகளைச் சந்தித்தும், மறைக்கோட்டக் குழுவை சிறப்பாக வழிநடத்தியும் குழுமவாழ்வை ஊக்கப் படுத்தினார். இவ்வாறு 2004ம் ஆண்டுக்கு பின்னான காலத்தில் சிறிய கிறிஸ்தவ குழுமவாழ்வு இயக்கம் படிப்படி யான முன்னேற்றத்தைக் கண்டது. இளவாலை மறைக் கோட்டத்தில் பெரும்பாலும் அனைத்துப் பங்குகளிலும் சிறிய கிறிஸ்தவ குழுமங்கள் கணிசமான அளவுக்கு இயங்கின. யாழ்ப்பாணம், தீவகம், பருத்தித்துறை ஆகிய மறைக் கோட்டங்களில் சில பங்குகளில் இவை இயங்கின. கிளி. முல்லை மறைக்கோட்டத்தில் தொடர்ச்சியான அரசி யல் நெருக்கடிகள் காரணமாக இவை பெரும்பாலும் முன்னேற்றம் காணவில்லை.

2009ஆம் ஆண்டு அருட்பணி. ம.இயேசுரட்ணம் அடிகளாரிடமிருந்து இந்தப் பணியகத்தின் பொறுப்பை




குருக்கள் குழுமங்களை ஆரம்பிக்கின்றனர். இப்புதிய பங்குகளில் அவை சிறப்பாக இயங்கத் தொடங்கு கின்றன. ஆகவே குருக்களின் ஈடுபாடு என்பது குழுமங்களின் வளர்ச்சியையோ வீழ்ச்சியையோ தீர மானிக்கும் ஒரு முக்கிய விடயமாக மாறி விட்டது. இந்நிலையில் மறைமாவட்ட ரீதியாக கொள்ளை வகுப்பு, முன்னெடுப்பு, கண்காணிப்பு என்பன ஒழுங்கமைக் கப்படாமலும் குருக்களுக்கு ஆர்வம் ஏற்படும் வகையில் தொடர்பயிற்சிகள் வழங்கப்படாமலும் இருக்குமிடத்து இக்குழும வாழ்வு தேக்கமடைவது தவிர்க்க முடியாது என்ற நிலை ஏற்படுகிறது. மேலும் போர் முடிவுக்கு பின் தோன்றிய பல் மாற்றங்கள் புதிய சிக்கல்கள் நிறைந்த ஒரு சமூகத்தைத் தோற்றுவித்திருக்கிறது. கோளமயமாதலின் உதிரி விளைவுகளான உலகப்

**அருட்தந்தை. ம.வி.இ. ரவிச்சந்திரன்**

போக்கு, நவீன பொழுது போக்குகள், சுயநலம் மிகுந்த தனிநபர் சார் வாழ்க்கை, சமூக அக்கறையின்மை போன்ற விடயங்கள் குழும வாழ்வுக்குப் புதிய சவால்களாக மேலெழுந்துள்ளன.

# சூழலுக்கு ஏற்ற வாழ்க்கை !



முதல் உலகப் போர் நடந்து கொண்டி ருந்தபோது, இங்கிலாந்துப் பிரதமர் லாயிட் ஜார்ஜி யைப் பார்த்து அவரது நண்பர் கேட்டார்: "இவ்வளவு வேலை, கவலை நெருக்கடிகளுக்கு மத்தி யில் நீங்கள் உங்களை நிதானமாகச் சரியாகத் தக்க வைத் துக் கொள்வது எப்படி?" என்று. அதற்கு ஓய்வின்றி முடிவில்லாமல் அநேகநாள் உழைத்தும் அமைதி யையும் பொறுமையையும் இழக்காத லாயிட் ஜார்ஜ் இவ்வாறு பதிலளித்தார்: "எனக்கு ஒரு துன் பத்திலிருந்து இன்னொரு துன்பத்திற்கு மாறுவதே ஒரு விடுமுறையை அனுபவிப்பது போன்று நல மானது" என்றார். எந்தச் சூழ்நிலையிலும் அமைதி யுடனும், நிதானத்துடனும் வாழக் கற்றுக் கொள் வதே வாழ்க்கையை அமைதியான, நிறைவான ஒன்றாக மாற்றும் வழி!

## இன்று முழு...

(7ம் பக்கத் தொடர்ச்சி)

ஆற்ற முடியாதவாறு சூழ்நிலைகள் எம்மைத் தடுமாறச் செய்கின்றன. கடவுள் தந்த பகுத்தறிவைப் பயன்படுத்தி எமது உயிரைத் தேவையான முன்னெச்சரிக்கையான கட்டுப்பாடுகளை கவனித்திற் கொள்வது முக்கியமானது. அத்தோடு எமது மனநி லையை நேரிய முறையில் கையாள்வது இன்னும் முக்கியமானதாகும். உலகம் முழுவதிலுமே ஒரு அச்சநிலையும், குழப்ப நிலையும், பொரு ளாதார மந்த நிலையும் காணப்படுகின்றது.

கடந்து வந்த போர்க்கால அனுபவம் எமக்கு ஓரளவுஅன்றையகொரோனாவால்ஏற்படும்தாக்கங்களை கையாளக்கூடிய மனப்பக்குவத்தை அளிக்கலாம். இன்று எம் மனநிலையை கையாளவும் ஒட்சிசன் தேவைப்படு கின்றது. பின்வரும் செயல்கள் எங்களுக்கு ஓரளவு ஒட்சி சனை, நம்பிக்கையைக் கொடுத்து வழிகாட்டலாம்.

- குடும்ப ஒன்று கூடல்களும் உரையாடல்களும் முக்கி யமானவை தொலைக்காட்சி, கைபேசிகளைத் தவிர்த்து, நேரடியான பகிர்வுகள், சந்திப்புக்கள் ஒட்சிசனை கொடுக் கும். இது மனநிலையைச் சீர்ப்படுத்த உதவும்.
- ஆன்மீக முயற்சிகளில் குடும்பமாகவோ, சிறு குழுக்க ளாகவோ (சுகாதாரக் கட்டுப்பாடுகளுடன்) ஈடுபடுதல் எமக்கு ஆற்றுப்படுத்துவதைக் கொடுக்கக் கூடியது. உதாரணம் : அன்பியம், வழிபாடு, ஆராதனைகள், மன அழுத்தங் களைக் குறைக்கலாம்.
- எமக்குப் பிரியமான பயன்தரும் சிறிய காரியங்களில் ஈடுபடுவதிலும் மன அழுத்தத்தைப் போக்க எமக்கு 'ஓட்சி சன்'போல்உதவலாம். உ+ம்:வீட்டுத்தோட்டம், குடும்பமாக சிறு பணிகளைச் செய்தல்.
- நோய் எதிர்ப்பு சக்தியை தரக்கூடிய இயற்கை முறை யிலான உணவுகளைத் தேர்ந்தெடுத்து உண்ணுதல். சுவா சத்தை சீராக்ககூடிய சில பயிற்சிகளை எடுத்தலும் ஒட்சி சன்உருவாக உதவலாம் உடற்பயிற்சியும்இன்றியமையாதது.
- அடுத்திருப்பவரின் பசிபோக்க, இன்னும் பிற தேவை களில்அக்கறைகொண்டுசெயற்படுத்தலும்முக்கியமானது. இது மனநிறைவிற்கும், மகிழ்ச்சிக்கும் ஓரளவு வழிவகுக் கும். உ+ம்: அடுத்திருப்பவருக்கு உதவிசெய்ய வழிவகுத்தல்.
- தொலைக்காட்சிகளிலும் சமூக வலைத் தளங்களிலும் ஈடுபடும் நேரத்தைக் குறைத்து பயனுள்ள விதத்தில், குறிப்பாகச் சிறிய நற்செயல்களில் மனதை ஈடுபடுத்துதல் தவிர்க்க முடியாதது. சமூக வலைத்தளங்களை, கைபேசி களைப் பயன்படுத்தி வாழ்க்கையின் யதார்த்தத்தை எதிர் கொள்வதிலிருந்து தப்பிப்பதற்கான (escapism) உத்தியாகப் பயன்படுத்தக்கூடாது. இத்தகைய வழிகாட்டல்களைப் பின்பற்று வது நம் மனதிற்குச் சீரான 'ஒட்சிசனை' வழங்கக் கூடியது.

**இயற்கைப் பாதுகாப்பின் ஒட்சிசன் உருவாக்கம்!**

இன்று இயற்கை வல்லுறவுக்கு உட்படுத்தப் பட்டுள்ளது. கடவுள் மனிதனுக்குக் கொடையாக விருத்தி செய்ய அளித்த இயற்கையை நாம் செய்து வாழுகின்ற நிலை ஏற்பட்டுள்ளது. ஓசோன் படலத்தில் விழுந்த ஓட்டைகளால் வெப்பமாதலும், இயற்கையை அழிக்கும் செயற்பாடுகளான காடுஅழித்தல்மணல்அகழ்ந்துஎடுத்தல் வயல்களை தோட்டங்களை இரசாயன உரங்களைப் பயன்படுத்தி உற்பத்தி அதிகரிப்புக்காக அவற்றை விதை யாக்குதல் போன்ற செயற்பாடுகள் இடம்பெற்று வருவதை நாம் அறிவோம். இதனால் வளிமண்டலத்தில் மாசு படிந்து தூய்மையில்லாத காற்றையும், போத்தல் தண்ணீரையும் குடிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளோம். இன்று பயிர்களுக்குப் பயன்படும் யூரியா வெடி மருந் துகளுக்கும் பயன்படுத்தப்படுகின்றது. இப்போது எமது நாட்டில் இரசாய உரம் தடைசெய்யப்பட்டுள்ளது வரவேற் கத்தக்கதே! இதனால் குறிப்பாக பல நோய்கள் உரு வாக காரணமாகின்றது. ஒவ்வொருவரும் ஒரு மரமாவது நடவேண்டும் என்ற சட்டம் கொண்டுவரப்பட வேண் டும். இப்படியாவது மரங்களைப் பாதுகாத்து ஒட்சிசனைப் பெற்றுக்கொள்வது மனித குலத்திற்கு நாம் செய்யும் உன்னதமான செயலாகும். இதைப்பற்றிய விழிப் புணர்வு மக்களிடையே ஏற்படுத்தப்பட வேண்டும்.படைப் பின்அதிபதியாகக்கடவுளால்உன்னதமாகப்படைக்கப்பட்ட மனிதனே இயற்கையை பல்வேறு வழிகளில் அழிக்கின் றான் என்பதே உண்மையாகும். அத்துடன் இயற்கை உணவுகளுக்குத் திரும்புவோம்! இயலுமானவரை பயன் தரும் மரங்களை நட்டு பயன் பெறுவோம். இது காலத்தின் கட்டாயமாகும். கட்டடங்களுக்குள் சிறை வாழ்க்கை வாழ் வதை விடுத்து இயற்கையோடு ஒட்டி உறவாடும் வாழ்க்கைக்குத் திரும்புவோம்.

சுவையூட்டிகளைத் தவிர்த்து இயற்கையான பானங்க ளையும், உணவுகளையும் நாடி நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்குவோம்! எம் எதிர்கால சந்ததிக்கு ஆரோக்கிய மானவாழ்விற்குவழிசமைக்கும்செயற்பாடுகளில்ஈடுபட்டு வளம்சேர்ப்போம். இயற்கை உரங்களைப்பயன்படுத்திநல் ஆரோக்கிய அறுவடையை பெறுவோம். காலம் கடந்த 'சுடலை ஞானமாக' இருந்தாலும் இயற்கையை பாதுகாப் பதன் மட்டில் விழிப்படைவது தவிர்க்க முடியாதது. இன் றைய கொரோனாச் சூழலைக் கையாளக்கூடிய விதத் தில் வாழ்க்கையை நகர்த்துவதே சாலச் சிறந்தது.

# காவலன் கலசம்

**எடுப்பதால் கிடைப்பதோ சிற்றின்பம்**
**கொடுப்பதால் பெறுவதோ பேரின்பம்.**

இறைக்க இறைக்க ஊறும் கிணறுபோல நாம் கொடுக்கும் வள்ளல்களாக எம்மை உருவாக்கும் பொழுது எமது இயல்பான நன்மைத்தனம் ஆறாய் பெருக்கெடுத்து ஓடும்.

இருப்பதிலிருந்துதான் கொடுக்க இயலும். இல்லாமையிலிருந்து எதையும் கொடுக்க இயலாது. இறைவன் எமக்கு நிறைவளங்களை ஈந்துள்ளார். எனவே, இறைவன் ஈந்ததிலிருந்து பிறருக்குக் கொடுக்க முற்படுவோம்.

## விருந்தோம்பலில் விழிப்பாயிருப்போம்!



அருட்பணி வின்சன் பற்றிக் (அமதி)

ஒரு முனிவர் வீடு வீடாய்த் திரிந்து இரவல் வேண்டி உண்டார். ஒருநாள் ஒரு வீட்டுக்காரன் தனது வீட்டிற்கு வந்து உணவு உண்ணுமாறு அழைத்தான். முனிவரும் அவ் அழைப்பை ஏற்று வீடு புகுந்தார். முனிவரை வீட்டில் இருத்திவிட்டு, அவன் அடி அடி என்று அடித்து நையப்புடைத்தான்.

பக்கத்து வீட்டுக்காரன் இதைக் கவனித்துவிட்டு, தன் வீட்டிற்கு முனிவரை அழைத்து விருந்து அளித்தான். நன்றாகச் சாப்பாடு கொடுத்துவிட்டு, “பக்கத்து வீட்டுக்காரன் உங்களை நல்லா அடிச்சுப் போட்டான் இல்லையா?” என்று கேட்டான்.

முனிவர் பதிலாக, “எல்லோரும் தாம் விதைத்த படியே அறுப்பர்” என்று மொழிந்தார். நல்லது செய்தால் நல்லதே கிடைக்கும்.

**விருந்தோம்பலை வளர்ப்பதற்கான ஏழு படிமுறைகள்:**

1. இறைவனின் வலிமைமிகு விருந்தோம்பலை மனதினில் பதிவுசெய்வோம்.
2. உலக செல்வங்களை முதன்மைப்படுத்தாது இறைதேடலை ஊக்கப்படுத்துவோம்.
3. இறைவனின் நிபந்தனையில்லாக் கொடுத்தலை மாதிரியாக்குவோம்.
4. உலக செல்வங்களை அளவீடாகக் கொண்டு செயற்படாதிருப்போம்.
5. இயல்பான விருந்தோம்பலில் ஆர்வம் காட்டுவோம்.
6. கொடுப்பதற்கான அளவீடுகளை அதிகரிப்போம்.
7. செயற்பாட்டிற்குச் சமனாக மனோபாங்கு முக்கியமானது எனக் கற்றுக்கொள்வோம்.

எமது பலவீனங்களில் கவனம் செலுத்தாது, எம்மை நேர்நோக்கோடு தரிசனம் செய்து, நம்பிக்கை நட்சத்திரங்களாய் திகழ்வோம். எமது வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருக்கும் நிலையை மாற்றியமைக்க ஆசையையும் ஆற்றலையும் ஒருங்கிணையச் செய்வோம். எமது ஆற்றல்களுக்கு, எமது வாழ்வியல் மதிப்பீடுகளுக்கு மீள்வடிவம் கொடுத்து, பரஸ்பர உறவைப் பலப்படுத்துவோம்.

கருணை உள்ளங்களாய் அவனியில் வாழ முயற்சி எடுப்போம்.

நல்லோரைச் சிறு சிறு குழுக்களாக இணைத்து, வலைப்பின்னலைத் தோற்றுவிப்போம்.

திறந்த மனப்பான்மை, தூய பார்வை, இனிய பேச்சு, ஈகை வீச்சு, நல்லதைச் செய்யவேண்டும் என்ற ஆர்வம், இல்ல விருந்தோம்பல், இயற்கைச் சூழமை-வுச் சமநிலை போன்றவற்றிற்குச் செயல்வடிவம் கொடுத்துப் பலமுள்ள அன்புச் சமூகத்தைக் கட்டி எழுப்புவோம்.

**விருந்து படைத்திடுவோம்**

1. சேர்ந்து உண்ணின்
   சோர்ந்து போகார்.
2. கொடுத்தலில் கிடைப்பது
   எடுப்பதில் அல்ல.
3. இல்லை என்றுசொல்லாது
   இருப்பதைப் பகிர்ந்திடுவோம்.
4. இல்லாதோர் நிறைவுபெற
   வல்லதையே செய்திடுவோம்.
5. இல்லம்வருவோர் இனிதேசெல்ல
   கள்ளமின்றி உதவிடுவோம்.
6. இதயத்திலிருந்து கொடுப்போரெல்லாம்
   இறைவன்வாழும் இல்லங்களே.
7. கனிவோடு கொடுத்தலே
   கற்றலின் பயனாகும்.
8. கடிந்து பேசாது
   கருணையுடன் நடந்திடுவோம்..
9. கொடுமையாக நடவாது
   உடமையைப் பகிர்ந்திடுவோம்.
10. இதமாகப் பேசி
    விருந்து படைத்திடுவோம்.

## இறைவன் நம்முடன் வழி நடக்கின்றார்



இறைவன் நம்முடன் வழி நடக்கின்றார். அவரது அருளாற்றல் தமக்குத் துணையாகிறது. அதனால் காரிருளிலும் அவரது ஒளி உண்டு கடல் நடுவிலும் பாதைகள் பிறக்கமுடியும் (விப 14) பாழ்வெளியிலும் உணவு கிடைக்கமுடியும் (விப 16) பாறையிலிருந்தும் நீரூற்றுகள் தோன்ற முடியும் (விப 17).

ஆம், நம்பிக்கையில் நாம் இறைவன் நம்முடன் வழிநடப்பதை, அவரது அருள் துணை நம்மை வழிநடத்துவதை நாம் உணரமுடியும். நம்பிக்கையால் அவருடன் நாம் கைகோர்த்துக் கொள்கிறோம். அவருடைய பார்வைகள் நம் பாதைகள் ஆகின்றன. அவருடைய திருவுளம் நம் வாழ்வின் திட்டம் ஆகிறது அவருடைய வாக்குறுதிகள் நம் எதிர்நோக்குகளாகவும் அவற்றை அடைவதற்கான ஆற்றல்களாகவும் மாறுகின்றன.

# 200 ஆம் ஆண்டை நோக்கிப் பயணிக்கும் போர்டோவின் திருக்குடும்ப சபைச் சகோதரிகள்

**ஈழத்தில் சங்கமித்த ஐரோப்பிய முத்துக்கள்**

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

அருட்சகோதரி அம்புறோஸின் மார்க்

**மதர் சலோம் -**
Madeleine REYNAERT

பிரான்சின் எல்லைப் பகுதியில் உள்ள Warwick என்னும் இடத்தில் 1894ம் ஆண்டு மதலேன் பிறந்தார். MP Raynaert மதலேனின் தந்தையார் இராணுவத்திலிருந்து விலகி, திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு 2 ஆண் பிள்ளைகளும் 9 பெண் பிள்ளைகளும் பிறந்தன. மதலேன் 5வது பெண் பிள்ளையாவார்.

தகப்பன் Marechal Ferrant ஆக வந்து தன்னிடம் வரும் பண்ணைத் தொழிலாளிகள், இரும்பு வேலைக்கலையின் ஆர்வமுள்ளவர்கள், இவர்களுடன் சேர்ந்து வேலை செய்தார். தமது கோவிலுக்கென்று 90அடி உயரமான கோபுரத்தைக் கட்டி, கோபுரத்திற்கு மேலே சிலுவையையும் நாட்டினார். 5வது மகளான மதலேன் தன் பங்குக் கோவிலில் திருமுழுக்குப் பெற்று 11 வயதில் முதல்நன்மையும், அடுத்த வருடத்தில் உறுதிப்பூசுதலும் பெற்றார். தனது குடும்பத்திலேயே, கீழ்ப்படிதல், பகிர்தல் தன்னை மறந்து சேவை செய்தல், சகோதர அன்பு முதலிய குமும வாழ்விற்குத் தேவையான சகல பண்புகளையும் கற்றுக்கொண்டார்.

தனது ஆரம்பக்கல்வியை அன்புக் கன்னியர் (Sister of Charity) பாடசாலையில் ஆரம்பித்தமையால் இரு மொழிகளிலும், திறமை பெற்றார். பிரான்சிய மொழியில் உயர்கல்வியை மேற்கொள்ள (Courtrat) என்னும் இடத்திற்கு சென்று, தனது சிற்றன்னை வீட்டில் வசித்து வந்தார். மதலேன் மிகவும் புத்தித்திறமை வாய்ந்தவர். தேவதாயில் மிகுந்த பக்தி கொண்டவர். இளைஞர் இயக்கங்களில் அவர்களை ஒன்று கூட்டும் திறனும், நிர்வாகத்திறனும், விளையாட்டு நாடகத்துறைகளில், மிகவும் ஆர்வம் கொண்டு, அவற்றை ஆயத்தப்படுத்தும் திறமைகளும் கொண்டிருந்தார். 1914 - 1918ம் ஆண்டுகளில் உலக யுத்தம் ஆரம்பமான போது, இவருக்கு வயது 20 மிகவும் கவர்ச்சியானதோற்றமுடையவளாக இருந்தார். இவர் அன்பு செய்த ஓர் இளைஞன். யுத்தத்தில் இறந்தது மதலேனுக்கு மிகவும் துயரமாக இருந்தாலும், இறைவனின் திட்டத்தை அறிய இது சந்தர்ப்பமாக அமைந்தது.

1917ம் ஆண்டு இவர் இருந்த நகரம் ஆபத்து என்ற படியால் அங்கிருந்து விலகி, குடும்பத்துடன் Assche என்னும் இடத்திற்கு வந்தார்கள். அங்கே மதலேன் ஆங்கிலம் சுருக்கெழுத்து, தட்டெழுத்து என்பவற்றையும் கற்றுக்கொண்டார். இவரின் திறமையை கண்ணுற்ற பாடசாலை அதிபர், படிப்பின் முடிவில், அங்கேயே கற்பிக்க நியமித்தார். சில வருடங்கள் அங்கு செலவழித்த பின், 1921ம் ஆண்டு மீளவும் தம் சொந்த இடமான Werwick வந்தார்கள். இளம் யுவதிகளுடன் சேர்ந்து, ஓர் அப்போஸ்தலனாக வழிநடத்திப் பணிபுரிந்து வந்தார்.

Bommel என்னும் O.M.I குருவானவர் இவரின் பக்தியை கண்ணுற்று, திருக் குடும்ப கன்னியர். சபையுடன் தொடர்பு கொள்ள ஆலோசனை வழங்கினார். அந்த நாட்களில் குழந்தை திரேசாவுக்குப் புனிதர் பட்டம் கொடுக்கும் நிகழ்வுக்கு ஆயத்தங்கள் நடந்தது. இந்நிலையில் எம் மதலேனுக்கு இருந்த கனவு உறுதியாகி, திருக்குடும்ப சபையில் சேர உத்தரவு கேட்டார். 1923ம் ஆண்டு பங்குனி மாதம் தன் குடும்பத்தை விட்டு 29 வயதில் போர்டோவை அடைந்தார். இவரின் தகப்பனுக்கு அதிக வேலை செய்ய முடியாத நிலையில் மதலேனின் பிரிவு கஸ்ரமாக இருப்பினும், ஒரு பலியாக, நல்ல கிறிஸ்தவனாக இவற்றை ஏற்றுக்கொண்டார்.

மதலேன் சலோமை என்னும் பெயர் பெற்று 1924 புரட்டாதி மாதம், முதல் வார்த்தைப்பாட்டையும், இலங்கை செல்வதற்கான பணியையும் ஏற்றுக் கொண்டார்.

இதற்கு முன்னர் தன் குடும்பத்திற்குப் பிரியாவிடை கூறவந்த போது, தகப்பன் அதிக வியாதியாக இருந்து இறந்துவிட்டார். இது சலோமைக்கு மிகவும் கவலையையும் அதிர்ச்சியையும் கொடுத்தது. மரணச் சடங்குகளினால் இவரின் பிரியாவிடைக்காலம் நீடித்தது. ஆனால் தாய் தன் மகளுக்கு உற்சாகம், நம்பிக்கை கொடுத்து, தலைவர்களின் விரும்பத்திற்கு பணிந்து நடக்க வேண்டுமெனக்கூறி Werwick இல் இருந்து போர்டோவுக்கு வீரத்துடன் வழி அனுப்பி வைத்தார்.

போர்டோவில் இருந்து கப்பல் மூலம் இலங்கை சேருவதற்கு, ஆயத்தங்கள் செய்தார். முதலில் யாழ்ப்பாணம் வந்து பின்னர் இளவாலைக்கு சலோமை அனுப்பப்பட்டார். பணிவாழ்வு - இளவாலையில் விடுதிக்கழகம் இருந்தது. ஆங்கில அறிவு இருந்ததால், Typing தட்டச்சு படிப்பிக்க இலகுவாக இருந்தது. கோவிற் பாட்டுக்களும் பழகிக், யாவரினதும் பாராட்டைப் பெற்றார். 18 வருடங்கள் இளவாலை மடத்திற்குத் தலைவியாகவும், அதைச் சார்ந்த 20 மடங்களையும் பொறுப்பேற்று நிர்வாகத்திறமையுடன் நடாத்தி வந்தார். இக் காலத்திலே கல்விப்பணி, ஆசிரியர் கல்லூரி, தமிழ் ஆங்கிலப்பாடசாலைகள், அநாதை இல்லம், நவ சந்நியாச இல்லம் அதன் ஆயத்த நிலையங்கள், நெசவுச்சாலை, விடுதிச்சாலை, ஐக்கிய பண்டகசாலை, மேலை நாட்டுச் சங்கீதம் இவை போன்ற உயிரூட்டும் பணிகளுக்கு தலைமை தாங்கி வழிநடத்தி வந்தார்.

இவரின் பணிக் காலத்தில், பல இந்துமத மாணவர்கள் படிப்பதற்காக விடுதிச் சாலையில் சேர்ந்து படித்தது மட்டுமல்ல, திருமுழுக்குப் பெற்று, துறவறத்திலும் சேர்ந்து கொண்டது. இறைவனுக்கு மகிமையே. ஒன்பது பெண் சகோதரிகளுடன் குடும்பத்தில் பெற்றுக்கொண்ட அன்பு, பாசம்... *(தொடரும்....)*

# எங்களையும் திருஅவையையும்...

(8ம் பக்கத் தொடர்ச்சி)

இங்கே ராசனுக்கு முதுகு வலிப் பிரச்சனை, ஆனால் அதற்குத் தீர்வு உண்டு. அதுதான் எண்ணெய். அவனுடைய பிரச்னைக்கு சரி யான தீர்வு எது என்று அறிந்து அவனுடைய தாயார் உதவி செய்கிறார், வழிநடத்துகிறார். இந்த தாயாரை போலத்தான் தூய ஆவியானவரும் எங்களைச் சரியான பாதையில், உண்மையை நோக்கி, இயேசுவை நோக்கி வழிநடத்துகிறார். அதனால் வாழ்வில் புத்தெழுச்சி பெருகிறது.

**தூய ஆவியார் இன்றித் திருஅவை இல்லை**

ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவின் மீட்புப் பணியை இன்று திருஅவை தொடர்ந்து ஆற்றிக்கொண்டிருக்கிறது. அது எவ்வாறெனில் கிறிஸ்துவின் மீட்புப் பணி கல்வாரி மலை- யோடு நிறைவு பெறவில்லை மாறாக அது திரு வருட்சாதனங்களூடாக தொடர்ந்து கொண்டி ருக்கிறது. "சிலுவைப்பலி பீடத்தில் கொண்டாடப் படும் பொழுதெல்லாம் நமது மீட்புப் பணியும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது" என இரண் டாம் வத்திகான் சங்கம் கூறுகிறது.

இந்த திருவருட்சாதனங்கள் எல்லாம் திருஅவையிலேதான் கொண்டாடப்படுகிறது. இதனால்தான் திருஅவையை உலகளாவிய திருவருட்சாதனம் என இரண்டாம் வத்திகான் சங்கம் திருஅவை (9) என்னும் பகுதியில் கூறுகிறது. எல்லாத் திருவட்சாதனங்களும் கிறிஸ்துவால் நிறுவப்பட்டது, அவையெல்லாம் தூய ஆவியாரின் துணையால் தான் இன்று நிறைவேற்றப்படுகின்றன. உதாரணத்திற்கு திருப்பலியை எடுத்துக் கொண்டால் நற்கருணை மான்றாட்டில் குரு இவ்வாறு செபிக்கிறார்:

"ஆகவே உம்முடைய ஆவியை பொழிந்து, இக் காணிக்கைகளை தூய்மைப்படுத்த உம்மை வேண்டுகிறோம். இவ்வாறு எங்கள் ஆண்டவர் இயேசுக்கிறிஸ்துவின் உடலும் இரத்தமுமாக எங்களுக்கு மாறுவனவாக."

கிறிஸ்துவின் நற்செய்தியை உலகெங் கும் அறிவித்து, நம்பிக்கை கொண்டோரை ஒன்றாக இணைத்து திருஅவையை நிறுவு வதே திருஅவையினுடைய பணியாக இருக் கிறது. இந்தப் பணியை திருஅவை செய்ய அதனை வழிநடத்துவது தூய ஆவியானவரே. அது எவ்வாறெனில் நற்செய்தி உண்மைகளை எங்களுக்கு நினைவூட்டி எங்கள் ஒவ் வொரு- வரையும் உண்மையான இறைவனிடம் வழி நடத்துகிறார். "என் பெயரால் தந்தை அனுப்பப் போகிற தூய ஆவியாராம் துணையாளர் உங்களுக்கு அனைத்தையும் கற்றுத்தருவார்: நான் கூறிய அனைத்தையும் உங்களுக்கு நினைவுட்டுவார். (யோவா14:26). "ஒன்றித்த வாழ்வு" (koinonia/ communio) திருஅவை யின் இயல்பாக இருக்கிறது. இந்த ஒன்றித்த வாழ்வை இரண்டு வகையாக நோக்கலாம். தந்தையாம் இறைவனுக்கும், எங்களுக்கும் (கட்புலனாகாத உறவு) உள்ள உறவு. இந்த உறவு திருஅவையின் உள்ளார்ந்த இறை யருளை பிரதிபடுத்துவதக இருக்கிறது. அடுத்து எங்களுக்கும், எங்கள் சக சகோதர சகோதரி ளுக்குமிடையிலான (கட்புலனாகும் உறவு). இந்த உறவினை திருஅவையில் வளர்ப்பவர் தூய ஆவியானவரே. "மனிதரிடையே குடி கொண்ட தூய ஆவியார் நம்பிக்கை கொண் டோரை ஒன்றுகூட்டி ஒரே உடலாக திரு அவையை கட்டியெழுப்புவதால் திருஅவை யின் ஒன்றிப்புக்கு அச்சாரம் ஆவியாரே" என இரண்டாம் வத்திக்கான் சங்கம் கூறுகிறது.

மேலும் நம்பிக்கை அறிக்கையில் சொல்லப்படுவது போல திருஅவையின் ஒரு மைத்தன்மை, தூய்மை, கத்தோலிக்கம், திருத் தூதுத் தன்மை எல்லாவற்றையும் பாது காப்பவர் தூய ஆவியானவரே.

தூய ஆவியானவருடைய செயல்களை திருஅவையில் பாஉக்கும் போது, அவர் இன்றி திருஅவையில்லை என்று கூற முடியும். "திரு அவை எங்கே உள்ளதோ அங்கே தூய ஆவி யார் இருக்கிறார். எங்கே தூய ஆவியார் உள்ளாரோ அங்கே திருஅவை உள்ளது" என புனித இரேனேயுஸ் கூறுகிறார். திருஅவை- வயை வழிநடத்தும் ஆவியானவரட் அதில் அங்கம் வகிக்கும் எங்கள் ஒவ்வொருவரையும் அவரது கொடைகளாலும், கனிகளாலும் நிரப்பி வழிநடத்துகிறார். எமது நாளந்த வழ்கையில் பலரை சந்திகிறோம், பல தீர்மானங்களை எடுக்கிறோம். சிலவே ளைகளில் என்ன செய்வது, எப்படிச் செய்வது, எதை பேசுவது என அங்கலாய்க்கும் போதும், வாழ்வின் ஒவ்வொரு கணமும் தூய ஆவியானவர் எங்களை வழி நடத்துகிறார். "அவர்கள் உங்களை கைது செய்து கொண்டுசெல்லும் போது என்ன பேசு வது என நீங்கள் முன்னதாகவே கவலைப்பட வேண்டாம்:

ஆவியானவர் எங்களுக்கு உயிரூட்டு கிறார், புனிதப்படுத்துகிறார். இன்று தூய ஆவியானவரின் செயற்பாடு என்று சொல்லிக் கொண்டு பல வேடிக்கையான நிகழ்வுகள் நடப்பது மிகவும் மன வேதனைக்குரியவை. எது தூய ஆவியானவருக்குரியது, எது தீய ஆவியின் செயல் என்று தெரிந்து கொள்ள, எம் வாழ்வு உண்மையை நோக்கி செல்ல, சரி யான முடிவுகளை எடுக்க தூய ஆவியான வரை நோக்கி மன்றாடுவோம். அவர் எம்மையும், எங்கள் குடும்பங்களையும் ஆளுகை செய்யட்டும்.

**நாளைய தூண்களை...**(5ம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் எவ்வளவோ தொடர்பாடல் வசதிகள் உருவாகியுள்ள போதும் கல்விக்கென நேரத்தினை ஒதுக்கி அவற்றின் மூலம் பயன் பெறுவது குறைந்துள்ளது. அத்துடன் இன்றைய இளைஞர்கள் மேலை நாட்டவர் தமது கலாசாரத்திற்கு புறம்பான ஆடைகளை விரும்பி அணிகின்றனர். அத்துடன் இன்றைய தலைமுறையின் ஆலயம் செல்வதையும், விரதம் (ஒருசந்தி) அனுசரிப்பதையும், தம்மைத் தியாகம் செய்து பிறருக்கு உதவி செய்வதையும் முக்கியமானதாக நினைப்பதில்லை. இப்படியே பார்த்திருந்தால் எமது சமய விழுமியங்களும் தமிழர்களின் பண்பாடும் சில காலத்தில் நம்மை விட்டு மறைந்து விடும். திசைமாறிச் செல்லும் எம் இளம் சமூகத்தை திசைதிருப்பி நல்வழிப்படுத்த பெரியோர்கள் முன்வர வேண்டும்.

இன்றைய இளைஞர்களிடம் செல்போன் மோகம் அதிகரித்த மை யால் சிறிய வயதிலேயே காதல் வசப்பட்டு கல்வி, விளையாட்டு துறைகளில் சாதிக்க தவறிவிடுகின்றார்கள். குடும்ப வறுமையினாலும் வாய்ப்புக்கள் கிடைக்காமையினாலும் மனமுடையும் இளையோர் தமது இலட்சியங்களை தொலைத்துவிட்டு கூலி வேலைக்குச் செல்கிறார்கள். போதைப் பாவ னைக்கும் அடிமையாகின்றார்கள். எனவே எமது சமுதாயத் தூண்களாகிய இளையோரை நல்ல பண்புள்ளவர்களாகவும், சிந்தனையுள்ளவர்களாகவும் செயற்பட நல்லதொரு வருங்கால சந்ததிகள் நல்வழி வந்தபூக்களாக வாழ்க்கைப் பூந்தோட்டத்தில் மலர்வார்கள்

## விண்ணக வாழ்வின் ஓராண்டு நினைவலைகள்

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 18 . 02 . 1980 | 08 . 06 . 2020 |



அமரர்

### பிரான்சிஸ் கிரோவர் றெஜினோல்ட்

'ஆண்டவரே உம்மிடம் நான் அடைக்கலம் புகுந்துள்ளேன்'
(திபா.7:1)

புங்கையின் புதல்வனே – எம்
குடும்பத்தின் குலவிளக்கே
பண்போடும் பாசத்தோடும்
பார்போற்ற வாழ்ந்தவனே
கடமையெனச் சென்றவனை
காலன் கவர்ந்தான் எனக்
காதில் வந்த செய்தி

பேரிடியாய் விழுந்ததையா
ஆண்டபோன்றென்ன ஓராயிரமாம்
ஆண்டுகள் ஆனாலும் – எம்
உயிருள்ள வரை உடனிருப்பாய் – எம்
உள்ளத்தினுள்ளே
நீ சென்ற வழிபார்த்து ..............
மீண்டும் வருவாய் ஐயா எம் வீட்டிற்கு

நித்திய இளைப்பாற்றியை அளித்தருளும் ஆண்டவரே
முடிவில்லாத ஒளி இவர் மேல் பிரகாசிக்கக் கடவது
ஆமென்

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக திருப்பலி
ஒப்புக்கொடுக்கப்படும்

குறிப்பு :- எம் நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக எம் குலவிளக்கின் ஓராண்டு நிகழ்வில் கலந்து கொள் வதற்கு தங்களை அழைக்க முடியாமையினையிட்டு மனம் வருந்துகின்றோம்

இல, 11 அச்சக வீதி
சுன்டுக்குளி
யாழ்ப்பாணம்

என்றும் உன் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

## 7ம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 08 . 09 . 1945 | 31 . 05 . 2014 |



### திருமதி. றெஜினா நீக்கிலாப்பிள்ளை

## 5ம் மாத நினைவஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 27 . 08 . 1938 | 21 . 01 . 2021 |



### திரு. சவரிமுத்து நீக்கிலாப்பிள்ளை

(அச்சுவேலி, யாழ்ப்பாணம்)

(உயிர் உள்ளவரை எம்மை நேசித்தீர், இறந்த பின்பும் உம்மை நாம் மறவோம்"

அம்மா என்ற பொருளுக்க அர்த்தம் நீதானம்மா!
எம்மை வழிநடத்திக் காத்திட்ட தெய்வமே அம்மா
ஆயிரம் உறவுகள் எம்மைத்தேடி வந்தாலும்
உங்கள் இனிய தாய்மைக்கு ஈடாகுமோ?
உயிர்தந்து உணவளித்து தோள் சுமந்து எமைக்காத்த தந்தையே!
கோடி தியாகத்தில் எம்மை நீங்கள் உருவாக்கினீர்,
உங்கள் அன்புக்கு ஏங்குகிறோம் அப்பா!

ஆயிரம் உறவிருந்தாலும் எதுவும் உங்களுக்கு நிகராகுமா?
உம்பிள்ளைகள் பரிதவிக்கின்றோம் இங்கு
எம்மைத் தேற்ற யார் வருவார்?
அம்மா, அப்பா என்றழைக்க எம் மனம் துடிக்கிறது
அம்மா எம்மை விட்டு நீங்கள் சென்று 7 ஆண்டுகள் ஆனதோ
அப்பா எம்மை விட்டு நீங்கள் சென்று 5 மாதங்கள் ஆகதோ
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவுகள்
எம் மனதை விட்டு நீங்காது. நித்திய இறைவனோடு
சங்கமமாக உங்களுக்காக செபிக்கின்றோம் எப்போதும்.

தகவல் : அருட்சகோதரி மரிய அஜந்தா (அ.கா.) மகள்

பிரிவால் நினைந்துருகும் குடும்பத்தினர்

## விண்ணக வாழ்வில் 37வது வருட நினைவுகள்

| அற்புதப் பிறப்பு | அக்கிரமன் அழிப்பு |
|---|---|
| 30 . 10 . 1961 | 06 . 06 . 1985 |



அமரர்

### ஞானப்பிரகாசம் அமலதாசன்

**இரட்டையராகப் பிறந்து, இரட்டிப்பான இன்பம் தந்தீர், இரட்சகர் அழைக்கும் நேரம் இரவோ பகலோ – அன்று இரணியன் ஒருவன் குண்டு இரக்கமின்றி உன் உயிர் போக்கி, இமை மூடவைத்ததென்னை. இவ்வுலக வாழ்வை முடித்தாய் மகனே. அவ்வுலக வாழ்வு எப்படியோ?**

என் சருவேசுரா, இவ்வுலகில் நான் மிகவும் நேசித்த அமலதாசனை நீர் என்னிடமிருந்து எடுத்துக் கொண்டீர்.அவரது இடத்தில் நீரே இருந்து எனக்கு ஆறுதலாக இரும், அவருக்கு நான் என் உள்ளத்தில் அளித்திருந்த இடத்தில் நீரே இருப்பீராக!

அவர் எனது பற்றுதலுக்கு உரிமை பெற்றவர், நான் அவர் மேல் அன்பாய் இருந்தேன். அவரது நேசத்தையும் உதவியையும் நெடுநாள் அனுபவிக்கலாம் என எதிர் பார்த்திருந்தேன் உமது சித்தம் வேறு என இப்போது அறிகிறேன். உமது திருச் சித்தத்தின்படியே ஆகக்கடவது.

ஊர்காவற்றுறை

தம்பி விமலன் (கனடா) தங்கை ஜஸ்ரினா (ஜேர்மனி) பெறாமக்கள் சிந்து, வாசுகி, மருமக்கள் ஜெயானி, மார்க், மைக் உற்றார் உறவினர்

## புனித நியமனங்கள் பெறும் அருட்பணியாளர்கள்

யாழ் மறைமாவட்டக் குருக்கள் சிலருக்கான புதிய பணி நியமனங்கள் யாழ் ஆயர், பேரருட் கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையால் வழங்கப்பட்டுள்ளது. இடமாற்றம் பெறும் குருக்களின் விபரங்களாவன.

அருட்பணி S.J.C பாஸ்கரன் - பங்குத்தந்தை - குழமன்கால்
அருட்பணி A.அல்வின் கிருபாகரன் - பங்குத்தந்தை - உடையார்கட்டு
அருட்பணி J.A. அலிஸ்ரன் நியூமன் - உதவிப் பங்குத்தந்தை - ஊறணி
அருட்பணி S. எட்வின் நரேஷ் - உதவிப் பங்குத்தந்தை - கிளிநொச்சி
அருட்பணி A.S.J.S சசிகரன் - புனித ஹென்றி அரசர் கல்லூரி விடுதி
அருட்பணி B. சதீஸ்குமார் - உதவிப் பங்குத்தந்தை, கிளிநொச்சி மகாவித்தியாலயம்
அருட்பணி R.G. விஜின்ரஸ் - கரவெட்டி திரு இருதயக் கல்லூரி

**புதிய குருக்கள்**

அருட்பணி K. தயாதீபன் - உதவிப் பங்குத்தந்தை - பேராலயம்
அருட்பணி J. நிலான் யூலியஸ் - உதவிப் பங்குத்தந்தை - குருநகர்
அருட்பணி S. யூட் கெமில்டன் - உதவிப் பங்குத்தந்தை - பாஷையூர்

*புதிய நியமனம் பெறும் குருக்களின் பணி சிறக்க பாதுகாவலன் வாசக நெஞ்சங்களின் நெஞ்சார்ந்த வாழ்த்துக்களையும் செபங்களையும் கூறிநிற்கின்றோம்.*

## பூநகரிப் பங்கில் மறைக்கல்விப் பாசறை



பூநகரிப் பங்கின் எட்டு ஆலயங்களைச் சேர்ந்த 92 பிள்ளைகளையும் 36 மறையாசிரியர்களையும் ஒன்றிணைத்து மிகச் சிறப்பான மறைக்கல்விப் பாசறை ஒன்று பங்குத்தந்தை அருட்பணி S.A. சுலக்ஷன் அடிகளாரால் ஒழுங்குபடுத்தப்பட்டது.

இப்பாசறையை மறைக்கல்வி இயக்குநர் அருட்பணி X.W. ஜேம்ஸ் அடிகளாரும் அவரது குழுவினரும் 26.04.2021 அன்று சிறப்பாக நெறிப்படுத்தியிருந்தனர்.

## கொய்யாத்தோட்டத்தில் பாடசாலை உபகரணங்கள் அன்பளிப்பு



கிறிஸ்து அரசர் பந்தியின் சிறந்த செயற்பாடாக உயிர்ப்பு விழாவை முன்னிட்டு கிறிஸ்து அரசர் ஆலயப் பங்கு எல்லைக்குட்பட்ட பகுதியில் வாழும் ஒன்று தொடக்கம் உயர்தரம் மட்டும் பாடசாலை உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கு, வகுப்புப் பிரிவுகளுக்கேற்ப 500/=, 1000/=, 1500/= பெறுமதியான வவுச்சர் மற்றும் அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டன.

இந் நிகழ்வுக்கு யாழ்ப்பாணம் கியூடெக் கரித்தாஸ் நிறுவன இயக்குநர் அருட்பணி S. இயூஜின் பிரான்சிஸ் அடிகளார் கலந்து சிறப்பித்தார்.

## புனித யோசேப்பு மன்றாட்டு மாலையில் புதிய மன்றாட்டுகள்



தொழிலாளரான புனித யோசேப்பு திருநாளன்று, புனித யோசேப்பு மன்றாட்டு மாலையில், ஏழு புதிய மன்றாட்டுகளை இணைத்துள்ளது, திருவழிபாடு மற்றும், அருளடையாளங்கள் பேராயம்.

புனித யோசேப்பு மன்றாட்டு மாலையில், சில புதிய மன்றாட்டுகள் இணைக்கப்பட்டுள்ளது குறித்து, உலகின் அனைத்து ஆயர் பேரவைகளின் தலைவர்களுக்கு மடல் ஒன்றை அனுப்பியுள்ள, இப்பேராயம், 1909ம் ஆண்டில், திருப்பீடத்தால் அங்கீகரிக்கப்பட்ட புனித யோசேப்பு மன்றாட்டு மாலையில், புனித யோசேப்புப் பற்றிய, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் சில சிந்தனைகளும், தற்போது மன்றாட்டுகளாக இணைக்கப்பட்டுள்ளன என்று கூறப்பட்டுள்ளது.

**புதிய சில மன்றாட்டுகள்**

Patris corde திருத்தூது மடலின் ஒளியில் இடம்பெற்றுள்ள புதிய சில மன்றாட்டுகள்:

***மீட்பரின் பாதுகாவலர், கிறிஸ்துவின் பணியாளர், நோயுற்றோரின் திருப்பணியாளர், துயரங்களில் துணையாளர், புலம்பெயர்ந்தோரின் பாதுகாவலர், இன்னலுற்றோரின் பாதுகாவலர் , வறியோரின் பாதுகாவலர்.***

புனித யோசேப்பு மன்றாட்டு மாலையில் புதிதாக இணைக்கப்பட்டுள்ள இந்த மன்றாட்டுகளை, ஆயர் பேரவைகள் அந்தந்தப் பகுதிகளின் மொழிகளில் மொழி பெயர்க்கலாம், அதற்குத் திருப்பீடத்தின் அனுமதி தேவையில்லை, தங்களின் நாடுகளில் புனித யோசேப்பிடம் பரிந்துரைக்கப்படும் மன்றாட்டுகளையும், ஆயர் பேரவைகள், விவேகத்தோடு தீர்மானித்து அதில் இணைக்கலாம் என்றும், அப்பேராயத்தின் மடலில் கூறப்பட்டுள்ளது.

## இஸ்ரேல், பாலஸ்தீனா - அமைதிப் பேச்சுவார்த்தைகள்



தொடர் மரணங்களையும், பேரழிவுகளையும் கொணரும் வன்முறைகளைக் கைவிட்டு, அமைதி காக்க முன் வரவேண்டும் என, இஸ்ரேல், மற்றும், பாலஸ்தீனியத் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ்.

இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனாவுக்கும் இடையே அண்மையில் மீண்டும் துவங்கியுள்ள மோதல்களில் பல குழந்தைகள் உயிரிழந்துள்ளது, கொடூரமானது, மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது என, எடுத்துரைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இவர்களின் மரணங்கள், இக்கால மக்கள் வருங்காலத்தைக் கட்டியெழுப்புவதில் அல்ல, மாறாக, அதனை அழிப்பதிலேயே ஆர்வமாக இருப்பதன் அடையாளமாக உள்ளன என்றார்.

தற்போது இஸ்ரேல், மற்றும் காஸாப் பகுதியில் இடம்பெற்றுவரும் வன்முறைகள், தொடர் மரணங்களையும் பேரழிவுகளையும் கொணர்வதுடன், மனித உடன்பிறந்த உணர்வுக்கும், அமைதியான இணக்கவாழ்வுக்கும் ஊறுவிளைவிப்பவைகளாக உள்ளன என்ற கவலையை வெளியிட்டார், திருத்தந்தை பிரான்சிஸ்.

வன்முறைகள் உருவாக்கும் காயங்களைக் குணப்படுத்த, அமைதிப் பேச்சுவார்த்தைக்கு உடனடியாகத் திரும்புவது அத்தியாவசியமானது என்று கூறிய திருத்தந்தை, இஸ்ரேல், மற்றும் பாலஸ்தீனியத் தலைவர்கள், ஆயுதங்கள் மீது கொண்டிருக்கும் ஆர்வத்தைக் கைவிட்டு, அமைதிப் பேச்சுவார்த்தைகளுக்கு, அனைத்துலக சமுதாயத்தின் உதவியுடன் முன்வரவேண்டும் என அழைப்பு விடுத்தார்.

இஸ்ரேல், பாலஸ்தீனா மோதல்களில் உயிரிழந்த குழந்தைகளுக்கு அனைவரும் இறைவேண்டல் செய்யுமாறும் அழைப்பு விடுத்து, தூய பேதுரு பெருங்கோவில் வளாகத்தில் குழுமியிருந்த மக்களோடு இணைந்து, "அருள் நிறை மரியே" செபத்தைச் செபித்தார், திருத்தந்தை பிரான்சிஸ்.

## "Antiquum Ministerium"

## மடலைக் குறித்து திருத்தந்தையின் கருத்து




மறைக்கல்வி ஆசிரியரின் திருப்பணி பற்றி, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் எழுதியுள்ள, Motu proprio வடிவிலான "Antiquum ministerium" திருத்தூது மடலை மையப்படுத்தி, அவர், தமது கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

கிறிஸ்தவ நம்பிக்கையின் அழகு, நன்மைத்தனம், மற்றும், உண்மை ஆகியவற்றைக் கண்டுணரக் காத்துக்கொண்டிருக்கும் அனைவரையும் சந்திப்பதற்குப் புறப்படுமாறு, இன்றும் கூட, ஆண்கள், மற்றும், பெண்களை, தூய ஆவியார் அழைக்கிறார் என்ற சொற்கள், திருத்தந்தையின் முதல் செய்தியில் இடம்பெற்றிருந்தன.

செய்தியாளர் கூட்டத்தில் வெளியிடப்பட்ட திருத்தந்தையின் திருத்தூது மடல் பற்றி, #Cathechists, #AntiquumMinisterium ஆகிய இரு ஹாஷ்டாக்குகளுடன் பதிவான செய்திகளுடன், அந்த மடலை வாசிப்பதற்கு உதவியாக, இணையப் பக்க முகவரியும் தரப்பட்டுள்ளன.

*https://www.vatican.va/content/francesco/en/motu_proprio/documents/papa-francesco-motu-proprio-20210510_antiquum-ministerium.html*

மேலும், "நான் பின்செல்லவேண்டிய பாதை எது? உலகப்போக்கின் பாதைகள், தன்னிலையை வலியுறுத்தும் பாதைகள், தன்னல அதிகாரத்தின் பாதைகள் போன்ற, விண்ணகத்திற்கு இட்டுச்செல்லாத பாதைகளும் உள்ளன. ஆனால், தாழ்ச்சிநிறைந்த அன்பு, இறைவேண்டல், கனிவு, நம்பிக்கை, பிறர் பணி போன்ற இயேசுவின் பாதைகளும் உள்ளன" என்ற சொற்கள், திருத்தந்தையின் இரண்டாவது செய்தியில் இடம்பெற்றிருந்தன.

## இயேசுவின் விண்ணேற்புத் தரும் மகிழ்வுக்குக் காரணங்கள்



இயேசு தங்களைவிட்டுப் பிரிந்து விண்ணகத்திற்கு எழும்பிச் சென்றது, சீடர்களில் கவலையை ஏற்படுத்தவில்லை, மாறாக, உலகிற்குள் மறைபணியாற்றச் செல்வதற்குரிய தயாரிப்பையும், மகிழ்வையும் தந்தது என்றார் திருத்தந்தை பிரான்சிஸ்.

இயேசுவின் விண்ணேற்றம், அவரின் சீடர்களில், இழப்புக் குறித்த உணர்வையோ, தாங்கள் கைவிடப்பட்ட உணர்வையோ வழங்கவில்லை, ஏனெனில், இயேசுவின் விண்ணேற்றம், அவர் இவ்வுலகிற்கு வந்த பணியின் முழுநிறைவாக இருந்தது என்று, எடுத்துரைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், உலகின் பல பாகங்களில் கொண்டாடப்பட்ட இயேசுவின் விண்ணேற்பு விழா, மனித நிலைக்கு இறங்கி வந்த இறைமகன், நம் ஊனுடலை எடுத்துக்கொண்டு விண்ணகம் எழும்பிச் சென்றதைக் குறிக்கின்றது, என்றார்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2021ம் ஆண்டு மே மாதம் 23ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.